SUPPLEMENT TO THE "CATHOLIC GUARDIAN"

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "GUARDIAN" JAFFNA.

Telephone: No. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

74-ம் புத்தகம் 46-ம் இல. யாழ்ப்பாணம் 1949-ம் ஆண்டு கார்த்திகை மாசம் 24-ந் திகதி வியாழக்கிழமை—பிரதி சதம் 10

## பிரேதக்குழிகளின் பிரலாபம்!

முன் தொடர்ச்சி

போலுடையவும், பீற்றருடையவும் உடல்கள் நடுக்கமெடுக்கத் தொடங்கின. பயத்தால் வெயர்வைஉண்டாயிற்று. செய்வதின்னது, சொல்வதின்னது என்று தெரியாமற் திகைத்தார்கள். அத்தருணம் திருச்சிலுவையிற்தொங்கி நிஷ்டூர வேதனைகள் அனுபவித்துக் கொண்டிருந்த நேசயேசுவின் விரித்த கரங்கள் அசசேமக் காலையில் அடக்கப்பட்டிருக்கும் புண்ணிய ஆத்துமாக்களை ஆசையோடு கட்டித்தழுவப் பிரயத்தனப்படுவது போலவும், ஆனால், ஒரு ஆத்துமத்தையென்கிலும் அரவணைத்துக்கொள்ள வியலாது அவர் திருக்கரங்கள் ஏமாற்றத்தை அடைவதுபோலவும் அவர்களுக்குத் தோன்றின. அப்போது அவர்கள் மனம்பதைபதைத்து, பரிதபித்து, "எங்கள் ஆத்தும நேசரான ஆண்டவரே! எங்கள் குற்றங்களை மன்னித்தருளும்; தேவரீர் ஆத்துமங்களிற்கொண்டிருக்கும் தணியாததாகத்தை இதோ! நாங்கள் உணருகின்றோம்; இனிமேலாவது நாங்கள் உத்தரிப்புஸ்தல ஆத்துமாக்களுக்காக மன்றாடி அவர்களை உமது அரவணைப்பில் ஆவலுடன் கொண்டுவந்து சேர்ப்பதினாலே உமது தாகத்தைத் தீர்த்து வைக்கப் பிரயாசப்படுவோம்; நேசயேசுவே! உலகத்தில் இருப்பவர்களை மாத்திரமல்ல, உத்தரிப்புஸ்தலத்தில் இருப்பவர்களையும் இரட்சிக்க நாங்கள் கடமைப்பட்டிருக்கின்றோம் என்பதை மெய்யாகவே இப்போது கண்டு பிடிக்கின்றோம். தேவரீருடைய விலையில்லாத திருவிரத்தப்பலன் எல்லா ஆத்துமங்களுக்கும் கிடைப்பதாக" என்று அவர்கள் தங்கள் மனதாரப் பிரார்த்தித்துக்கொண்டிருந்தார்கள்.

இத்துடன் பிரேதக்குழிகளின் பிரலாபம் ஓய்ந்தபாடாகவில்லை. இதோ! பலதிசைகளிலுமிருந்து பிரேதங்கள்வாய்திறந்து மகா பயங்கரதொனியோடு "ஐயோ! என்செல்வநண்பர்களே! நீங்கள் எங்களையுமா மறந்துபோனீர்கள். உங்களுடன் ஒன்றாகப் படித்துக் கூடித்திரிந்து விளையாடி உண்டுகளித்த உங்கள் சிநேகிதர் நாங்கள் அல்லவா? உங்கள் அன்பை நாங்கள் இன்னும் மறக்கவில்லையே. நீங்கள் எங்களை இத்ற்கிடையில் மறந்துபோனதென்ன? தேவசாயலாகப் படைக்கப்பெற்ற நாங்கள் இதோ தேவசந்நிதியை ஏறெடுத்துப்பார்க்க முடியாமல் இந்தஇருட்டறையில்— இந்த அகோர நெருப்புச் சமுத்திரத்தில் அமிழ்ந்தாமல் அமிழ்ந்து அழியாமல்அழிந்து, மிதக்கின்றோமே. ஐயோ நண்பர்களே! இந்தநெருப்பின் அகோரத்தை நீங்கள் உணருவீர்களா? உலகத்து நெருப்பை இந்தநெருப்போடு ஒப்பிட்டால், அது குளிர்ந்தபானத்துக்குச் சமானமாகவிருக்குமே. நாங்கள் அனுபவிக்கும் இந்தஉத்தரிக்கிறஸ்தல நெருப்பில் ஒருபொறியானது உங்கள் உலகத்திலுள்ள ஐந்துசமுத்திரங்களையும், அகிலநீர்நிலையங்களையும் வற்றவைத்து உங்கள்பெரிய தேசப்பரப்புகளையும் சாம்பலாக எரித்துவிடுமே. அவ்வளவு அகோர நெருப்புக்குள்ளே நாங்கள் கிடந்து புழுப்போலத்துடித்துப் படும்வேதனையை நீங்கள் கொஞ்சமாவது நினைத்துப் பாருங்கள். ஆ! இரக்கமுள்ள தேவன் நாங்கள் ஒருநாளாவது திரும்பவும்போய் உலகிற்சீவிக்க இடங்கொடுத்தால் எங்கள்பாவக் குறைகளுக்காகக் கடின தபசு செய்து, எங்கள் தேகங்களை நெருப்பினாற்சுட்டுவதைத்து எங்கள் ஈடேற்றத்தை நிச்சயப்படுத்திக்கொள்ளுவோமே. ஆனால் ஐயோ! எங்களுக்குஇரக்கத்தின் காலம் முடிந்துவிட்டது. இது நீதியின்காலம். நாங்கள் தெய்வ நீதிப்படி தண்டிக்கப்படுகின்றோம். ஆனபடியால் எங்கள் அன்பான நண்பர்களே! நீங்கள் இரக்கம்வைத்து எங்களுக்காக ஒறுத்தல்உபவாசங்களைச் செய்து எங்களையும், எங்கள்நீதியின்சொரூபமாகிய பரம்பொருளையும் ஒன்றுசேர்த்துவிடுங்கள். இதோநாங்கள் எங்கள் ஆருயிர் நண்பர்களாகிய உங்களைநோக்கிக் கையெடுக்கின்றோம். பிச்சை கேட்கின்றோம். உங்கள்ஒறுத்தல் உபவாசங்களாகிய பேறுபலன்களை எங்கள்பிச்சைப்பாத்திரத்துட் போடுங்கள். நாங்கள் அதையுண்டு பசியாறுவதுமல்லாமல் எங்கள்அன்பின் காந்தனை தேவனுடன் விரைவாக ஒன்றிப்போம். மறந்துவிடாதீர்கள்" என்று அங்கலாய்ப்பாகக் கூறின.

(தொடரும்)

## இரகசியங்கள் ஒன்பதும் எவையாய் இருக்கும்?

(முன்தொடர்ச்சி)

### மாதாவின் செய்திகள்

அங்கு தேவதாயார் தமது காட்சிகளின்போது விடுத்த செய்தி வருமாறு:

1. குருமார்களுக்காக மன்றாடுங்கள்.
2. பாவிகளுக்காக மன்றாடுங்கள்.
3. செபமாலை சொல்லுங்கள்.
4. ருஷியாவின் மனந்திரும்புதலுக்காக மன்றாடுங்கள்.
5. பரிசுத்த பிதாவுக்காக மன்றாடுங்கள்.

பிரதானமாக நான்காவதையே மாதா அழுத்தமாக எடுத்துக்கூறினர். அவர் காட்சியருளியஒவ்வோர்முறையுமே இதைச் சொல்லியிருக்கிறார். "அவர் திருக்குமாரன் நமது பாவங்களாலே சலித்து ஆயாசமுற்றிருக்கின்றார்; மாதாவுக்கு விரோதமாய்ச் செய்யப்படும் அக்கிரமங்களையிட்டுத்தான் அதிகமாக அவர் வேதனை அனுபவிக்கின்றார்" என்று அனிற்ரு கூறியிருக்கின்ருள். அவள்மட்டிலே தாயார் உண்டுபண்ணிய முதல் மனப்பதிவானது அழியாத மாபெரும் ஞாபகத்தை அவளிடம் பதித்துவிடலாயிற்று. முந்தஅவர் முழுதும் வெண்மையான அங்கிதரித்திருந்தார். வைகாசிமாதம் 3-ந் திகதிக்குப்பின் நீலஅங்கி தரித்துத் தமதுகரங்களில் தம்முடைய திருக்குழந்தையையும் கொண்டுவரக்காணப்பட்டார். ஓர்முறை அவர் கரங்களில் இருந்துகொண்டு குழந்தையேசு உலகத்தை ஆசீர்வதித்தார்.

### சூரியனின் அடையாளங்கள்

இச்சம்பவங்கள் நிகழ்ந்தகாலையில் மலைப்பக்கத்தின்கீழ்பெருஞ் சனக் குழாங்கள் தேங்கியிருந்தன. ஈருந்தகாட்சிகளின் போது ஓர்நாளில் சமுகமாயிருந்த சனத்தொகை ஐம்பதினாயிரம் பேரென மதிப்பிடலாயிற்று. "சூரியனில் அடையாளங்கள் காணப்படும்" என்று சில தடவைகளில் அனிற்ரு கூறியிருந்தாள். அந்தஅடையாளங்களை அத்தலத்தில்நின்ற ஒவ்வொருவருமே கண்டுகொண்டார்கள். சூரியனின் நிறம் மாறி மாறி ஆகாயத்தில் பலமுறையும் அசைந்துசெல்வதாகத் தோற்றியது. இதுஜிமிக்ளியானே பதியில் மாத்திரமல்ல, ஆனால், அங்கிருந்தும் பலமைல் தூரத்திற்கப்பால் நின்றவர்களுக்கும் காணப்பட்டது. ஆசீர்வாதப் பர்சபையைச்சேர்ந்த வண. பயஸ் பிறெடெறிச்சி சுவாமியவர்களும் இதைக்கண்ணுற்ருர். சனத்திரளின்மத்தியில் சமுகமாயிருந்தஇவர் நீலம், மஞ்சள், சிவப்பு, பச்சைநிறமாகச் சூரியன் முறையே மாறியதையும், தலைக்குமேலே உயர அசைந்து சென்றதையும் தாம் கண்டதாகச் சாட்சியங்கூறியிருக்கின்ருர். வண. பயஸ் சுவாமியவர்கள் இத்தாலியிலே மசெருற்ருவைச் சேர்ந்த மற்றெலிக்காஎனுமிடத்திலுள்ள அர்ச். தெரேசம்மாளின் சில்வேஸ்திரிய ஆசீர்வாதப்பர் சபைச் சிரேஷ்டராவர். அதே சபையைச்சேர்ந்த வண. அல்பெறிக்கோ மக்சியோனி சுவாமியவர்களும் அங்கிருந்து சுமார் 30 மைல் தூரத்திற்கப்பால் மற்றெல்லா எனுமிடத்திலிருந்து அதே காட்சியைக் கண்டதாகவும், வைகாசிமாதம் 23-ந்திகதியாகிய அன்றுதினம் அந்த வேளையில் ஓர் நோயாளிக்கு அந்திய தேவதிரவியானுமானங்கள் அருளுமாறு அழைக்கபெற்றுப் போய் அங்கிருக்க நேர்ந்ததாகவும் தெரிவித்திருக்கின்ருர்.

### குருப்பிரசாதிகளின் சான்று

அப்பதிக்குச் சமீபமான வெனரெற்ரு எனுமிடத்துப் பங்குவிசாரணைக் குரவரான வண. கொன்ஸ்ரான்ரினி கஜோனி சுவாமியவர்களும் தேவதாயாரை, அவர்கரங்களில் திருக்குழந்தையேசுவுடன் உள்ளபடியே பார்த்ததாகக் கூறியிருக்கிருர். வேறுபலரும் அவ்வாறே பார்த்திருக்கின்றனர். சிலர் கருமையான அங்கியுடனும், வேறுசிலர் வெண்மையான அங்கியுடனும் மாதாவைக் கண்டனர். அனிற்ருவோ நீலஅங்கியுடன் அவரைக்கண்டாள். வெண்ணங்கியுடன் மாதாவைக் கண்டவர்கள் இஷ்டப்பிரசாத அந்தஸ்தில் இருந்தார்களென்றும், கருமங்கியுடன் கண்டவர்கள் அப்படியில்லையென்றும் பிந்த அனிற்ரு சனங்களுக்குக் கூறினாள். தேவதாயாராலேயே

(தொடர்ச்சி 8-ப் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய நகரின் ஆயத்தம

பரிசுத்த வருடத்துக்கு ஓர் ஞான ஆயத்தமாக 'நல்லநுகூலப் படையணி' ஒன்று தொடங்கியிருப்பதாக ரோமை மேற்றிராசனத்தின் பாப்பாசரது விக்கார் ஜெனறலாகிய கருதினல் மார்செற்றி செல்வக்கியானி ஆண்டவர் பிரசித்தமாக அறிவித்திருக்கின்றார். இந்தப் படையணியின் நோக்கம் யாதெனில், அடுத்த பரிசுத்தவருடத்துக்கு ரோமைநகரை ஆயத்தஞ்செய்வதேயாகும். அதனால் நித்திய நகர் அந்தவருட யாத்திரிகளுக் கெல்லாம ஆழ்ந்த உணர்ச்சிததும்பும் கிறீஸ்த வாழ்க்கையின்காட்சி அளிப்பதாயிருக்கும. இந்தப்படையணி இம்மாசம் 11-ந் திகதி ஆரம்பமாகி, ஞாயிறு, செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் நடந்து வருகிறது. அடுத்த மார்கழி மாதம் 6-ந்திகதி இது முடிவாகும். இத்தாலியிலுள்ள கீர்த்திவாய்ந்த பிரசங்கிமாருள் ஒருவரான வண. லொம்பார்டி சுவாமியவர்கள் அந்நாட்களிலே அர்ச். மேரி மஜோர் மகாஆலயத்தில் போதகஞ்செய்து வருகின்றார்.

படையணி முடிவின் அறிகுறியாக மார்கழிமாதம் 8-ந் திகதி தேவமாதா மாசில்லாமல் உற்பவித்த திருநாளன்று "ரோமானிய மக்களின் இரட்சணிய நாயகி" திருச்சுரூபம் மேரிமஜோர் மகா ஆலயத்திலிருந்து சம்பேதுருவானவர் மகாஆலயத்துக்குப் பெரிய ஊர்வலமாகக் கொண்டுசெல்லப்பெற்று அங்கே அம்மாதம் 18-ந் திகதி வரையில் விசுவாசிகளின் வணக்கத்துக்காக வைக்கப்படும்.

### இத்தாலிய யாத்திரிகர்

பரிசுத்தவருடத்துக்கென்றுரோமாபுரிக்கு ஒழுங்குபண்ணப்பட்டுவரும் யாத்திரைகளில் தங்களைச் சேர்த்துக்கொள்ளுமாறு இத்தாலியில்மாத்திரம் பத்து லட்சம்பேருக்கு மேற்பட்ட யாத்திரிகர் ஏலவேதானே மனுப்பண்ணியிருக்கின்றார்கள். அங்கே இவர்களில் மிகப் பெருந்தொகையானோர் லொம்பார்டி மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். இம்மாகாணம் பெரிய கைத்தொழிற் பட்டணமாகிய மிலானைத் தலைநகராகக் கொண்டது. எல்லாமாக 3,50,000 லொம்பார்டியர்கள் பரிசுத்த வருடத்திலே ரோமாபுரிக்கு யாத்திரை செய்வார்கள். அவ்வருடத்திலே யாத்திரிகருக்கென்று வத்திக்கானல் கொண்டு நடத்தப்படும் சந்நியாச கன்னிகா மடங்களிலும், ஹோஸ்ரெல்களிலும் இரவுஒன்றுக்கு இருபதினாயிரம் படுக்கைகள் கிடைப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இவை தவிர ரோமைநகரின் சுற்றுடலில் அமைக்கப்படும் இரு முகாங்களிலும் 1,500 இளைஞர்களுக்குப் போதிய இடவசதிகள் கிடைக்கும்.

### வேறும் புதியகாட்சிகள்

தேவதாயார் மேலும் காட்சிகள் அளித்திருப்பதாக ஜேர்மனியிலிருந்தும், நெதர்லாந்திலிருந்தும் செய்திகள் கிடைத்திருக்கின்றன. இரு தேசங்களிலுமே கத்தோலிக்க பத்திரிகைகள் இச்செய்திகள்பற்றி மிகுந்த சாக்கிரதையுடன் நடந்துகொண்டிருக்கின்றன. ஆனால், உலகப் பத்திரிகைகளோ அவைகளைப்பற்றிப் பெரிதும்பிரஸ்தாபம் செய்து வருகின்றன. நூறெம்பேர்க் நகருக்குச் சமீபமான தேண் எனும் கிராமத்திலே 10 முதல் 14 வயதுவரையிலுள்ள ஒன்பது பிள்ளைகள் சென்ற ஐப்பசிமாதம் 9-ந் திகதி தொடக்கம் ஒவ்வோர் சாயந்தரமும் அதேயிடத்தில் தானே 6 மணிவேளையாகிய அதே நேரத்திற்தானே தேவதயார் காட்சியருளியதாகப் பாராட்டிக் கொள்ளுகிறார்கள். நெதர்லாந்திலே வீர்ற் எனுமிடத்தில் அச்சியந்திர சாலையில் பயிற்சிபெற்றுவரும் மத்தியூ, ஜேக்கப்ஸ் என்னும் இருவர் தேவதாயாரின் காட்சி பெற்றதாகக் கூறுகின்றார். தேண் எனும் இடத்திற்கு மாத்திரம் தினமும் 35,000 பேர்வரையில் செல்வதாக அறிவிக்கப்படுகிறது.

### இரும்புத்திரை நாடுகள்

ருஷிய இரும்புத்திரை நாடுகளிலிருந்தும் அநேக யாத்திரிகர் பரிசுத்த வருடத்திலே ரோமாபுரிக்கு வருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. ஆனல் உள்ளபடி இவர்களில் அதிகமானோர் அந்நாடுகளிலிருந்து வெளிகொண்டு தேசாந்திரிகளாகி அமெரிக்க ஐக்கிய தேசம், லத்தீன் அமெரிக்க நாடுகள், மேற்கு ஐரோப்பா, ஆஸ்திரேலியா முதலாம் நாடுகளில் சஞ்சரித்துவருவோரே. இந்த அகதிகளான யாத்திரிகரில் மிகப் பெருந் தொகையினர் போலிஷ்காரராகவே இருப்பர். ஏனெனில் பத்துலட்சம்பேருக்கு மேற்பட்ட போலிஷ்காரர் தங்கள்நாட்டுக்கு வெளியிலேசஞ்சரித்துவருவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

### பாப்பரசரின் ஆயத்தம்

பரிசுத்த பாப்பாசர் தமது கோடைகால மாளிகையிலிருந்து இம்மாசம் 27-ந் திகதி வத்திக்கான் மாளிகைக்குத் திரும்பியதும் தொடர்பான ஞான அப்பியாசங்களால் பரிசுத்த வருஷத்துக்குத் தம்மை ஆயத்தஞ் செய்து கொள்வார். போானஓர் யேசுசபைப் பிரசங்கியாரான வண. லூய்ஜிதே பொலெற்றி சுவாமிகள்தான் பாப்பாசருக்குப் பிரசங்கங்கள் செய்வார். ஞானஒடுக்க முடிவில் அதாவது மார்கழிமாதம் 12-ந் திகதி வரையில் கருதினல்மார் திருச்சங்கம் ஒன்றைக்கூட்டி, அதிலே நித்திய நகரிலுள்ள ஏனைய மூன்று மகா ஆலயங்களினதும் திருக்கபாடங்களை நத்தார்த் திருநாளுக்கு முதல்நாள் தமதிடமாகத் திறந்துவைக்கும் கருதினல் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வார். சம்பேதுருவானவர் மகா ஆலயத்தின் கபாடத்தைப் பாப்பாசர் திறந்துவைக்கும்போது, உலகமுழுவதிலுமுள்ள மேற்றிராசனங்களில் ஏறக்குறையச் சகலமுமே தங்கள் பிரதிநிதிகளைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

### அர்ச். சவேரியாரின் கரம்

ரோமாபுரியிலிருந்து யப்பானுக்குக் கொண்டுபோகப்பட்டிருந்த அர்ச். சவேரியாரின் வலது திருக்கரமானது யப்பானிலிருந்தும் அமெரிக்க ஐக்கிய தேசத்துக்குக் கொண்டுசெல்லப்படும் வழியில் ஹொங்கோங் நகர் மேற்றிராசனக்கோவிலில் ஒருநாள்முழுதும்தங்கியிருந்தது. அதைத் தரிசிப்பதற்கென கம்யூனிஸ்த ஆட்சியின்கீழுள்ள சீனவிலிருந்தும் ஏராளமான சீனக்கிறீஸ்தவர்கள் அங்கு சென்றிருந்தார்கள். அதன்மேல் பிலிப்பைன் தீவுகளிலே மனிலா நகருக்கும், வேறு பதினொரு நகரங்களுக்கும் அது எடுத்துச்செல்லப்பட்டது. செபுநகரில் ஒரு இராமுழுவதும் அது தங்கியிருந்தபோது சுமார் பன்னீராயிரம்பேர் வரையிற் சென்று அதற்கு வணக்கம் செலுத்தினார்கள். ஆவணி மாதம் 27-ந் திகதியன்று அது மனிலாநகரிலிருந்து அமெரிக்க ஐக்கியதேசத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டது. அத்தேசத்திலே அது மூன்றுமாதகாலம் பல்வேறு நகரங்களுக்கும், எடுத்துச்செல்லப்படும். முப்பது பேருக்கு மேற்பட்ட அமெரிக்க மேற்றிராணிமார்கள் தத்தம் மேற்றிராசனத்துக்கு அத்திருக்கரம் கொண்டுவரப்பட வேண்டுமென மனுப்பண்ணியிருக்கின்றார்கள்.

### முத். மரிய கொறெற்றி அம்மாள்

ரோமாபுரிக்குச் சமீபமாய் நெற்றூனோ எனும் கிராமத்தில் இற்றைக்கு 47 வருடங்களின்முன் தனது கற்பைப் பாதுகாத்துநின்றபோது கொலைசெய்யப்பட்ட பன்னிருவயதுப் பெண்மணியாகிய முத். மரியகொறெற்றி அம்மாளுக்கு அர்ச்சியசிஷ்டபட்டம் சூட்டும் திருவைபவம் சம்பேது வானவர் மகா ஆலயத்திலே அடுத்தவரும் வைகாசி மாதம் 7-ந் திகதி நடந்தேறவிருக்கிறது இவள் 1947-ம் ஆண்டு சித்திரைமாதம் முப்பதினாயிரம்மக்கள் குழுமியிருந்த சமுகத்திலே முத்திப்பேறு பட்டஞ் சூட்டப்பெற்றாள். அவ்வைபவத்தின் போது இவளின் 82 வயதுடைய அதிவிருத்தாப்பிய தாயும், அவள் சகோதரனும், இரு சகோதரிகளும் பிரசன்னமாயிருந்தார்கள். மரியாவைக் கொலை செய்த அலெக்சாண்டர் செறனெல்லி என்பவன் இன்னமும்சீவந்தனுக இருக்கின்றான். இவன் முப்பது வருடம் சிறையிருந்தபின், அதிரியாற்றிக் கடலின் கரையிலுள்ள றிமீனி எனுமிடத்துக்குச் சமீபமான சந்நியாசமடத்திலே கப்புச்சின்சபையில் ஓர் சாதாரண சந்நியாசியாயினன். மரியாவுக்கு முத்திப்பேறு பட்டம் அருளுதற்கான விசாரணையின்போது இவனும் சாட்சியம் அளித்திருந்தான். ஆனல், மற்றவர்களின் விநோதப் பிரியத்தினின்றும் நீங்கிக்கொள்ளுமாறு இவன் அவ்வைபவத்துக்குச் சமுகமாகவில்லை.

### உபதபாற்கந்தோரின்

## திறப்புவிழா

### பாப்பாமோட்டை

மன்னார்ப்பிரிவிலுள்ள பாப்பாமோட்டையிலே சென்ற 16-ந் திகதி காலை தந்தி-தபால் மந்திரியாரும், இத்தொகுதிப் பிரதிநிதியுமான திரு. க. சிற்றம்பலம் அவர்களால் பரிமளிப்பான வைபவங்கள்மத்தியில் உபதபாற்கந்தோர் திறந்துவைக்கப்படலாயிற்று. மந்திரியார் தமதுபிரத்தியேக காரியதரிசிடயுன் மாந்தைக் கருமாதிகாரி திரு. V. கந்தப்பிள்ளை அவர்கள் சமேதராய் வந்துசேர்ந்ததும் அவரைவரவேற்றுநின்ற கிராமவாசிகள் சிலரால் பூமாலைகள் புனையப்பட்டனர். அப்பால் மந்திரியார் பெருங்கரகோஷத்தின் மத்தியில் உபதபாற்கந்தோரைப் பாவனைக்குத் திறந்துவைத்தனர். அதனைத்தொடர்ந்து கருமாதிகாரி தலைமையில் சிறுஉபசாரணை நடைபெற்றது. அதில் சிற்றுண்டிவகைகளும், லகுபானவகைகளும் பரிமாறப்பட்டன. அவ்வேளை கிராமவாசிகள்பேரால் தலைமை ஆசிரியர் எஸ். அந்தோனிப்பிள்ளை எழுந்து, கிராமத்தின் குறைபாடுகளை எடுத்துக்காட்டி, அவற்றை நிவிர்த்தி செய்வது அவசியமெனத் தெரிவித்துநின்றனர். பின் தலைவர் அவர்களால் சில குறிப்புரைகள் கூறப்பட்டன. ஈற்றில் மந்திரியார்எழுந்து, தமக்குச்செய்யப்பட்ட வரவேற்புக்காக நன்றிகூறி ஆசிரியர் அந்தோனிப்பிள்ளை கேட்டுக்கொண்ட அவசியஅலுவல்கள் சிலவற்றை உடனேநிறைவேற்றி வைப்பதற்கான நடவடிக்கை எடுப்பதாக உறுதிவாக்களித்ததும் திறப்புவிழா வைபவம் முடிவெய்தியது.

—நிருபர்

❀ பரிசுத்தவருடத்திலே பலஸ்தீன் நாட்டின் திருஸ்தலங்களைத் தரிசிப்பதற்காகத் தனதுநாட்டில் கத்தோலிக்க யாத்திரிகர் பிரவேசிக்க இஸ்ருயேல் யூதஅரசாங்கம் அனுமதியளித்திருப்பதாகச்செய்திகிடைத்திருக்கிறது




பொலனருவா கல் பாறை ஒன்றில் உத்தேசத்துடன்செதுக்கப்பட்டிருக்கும்அதி வீரபராக்கிரமன்னரின்சிலையானது இலங்கை மகிமைகளில் ஒன்றாகும்.

நேஸில்ஸாம் கூட, இலங்கைப்பொது ஜனங்களுக்கு இன்றும், என்றும் விசேஷ பிரீத சிலதை

"நெஸ்டோமோல்ட்"

சம்பூரண மோல்ட்டேட்மில்க் மூலம் வழங்கி வருகிறது.

குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் ஏற்ற, விட்டமின் B 1 சத்து சேர்க்கப்பட்ட மதுரமுள்ள போஷணபானம்




சம்பூரணமான தேகாரோக்கியத்திற்கும் கூடுதலானசக்தியைப்பெறுவதற்கும்.

எல்லா ஸ்டோர்களிலும் கூட்டுறவு சங்கங்களிலும் விற்கப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க வாசகம்

சிலவருடங்களாக அச்சேற்ருது விடப்பட்டிருந்த எங்கள் கத்தோலிக்க வாசகப்புத்தகங்கள் மேற்றிராசன அதிகாரிகளால் நியமிக்கப்பெற்ற ஓர் குருப்பிரசாதியின் மேற்பார்வையின்கீழ் சில தமிழ்வித்துவான்களால் புதிதாகத் தொகுக்கப்பெற்றிருக்கின்றன.

தற்பொழுது பாலர் பகுதி கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு, 2-ம் வகுப்பு, 3-ம்வகுப்புப்புத்தகங்கள் அச்சேற்றப்பெற்று வெளிவந்துவிட்டனவென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேம். மற்றைய 4-ம், 5-ம் வகுப்புப் புத்தகங்களும் அடுத்துவரும் 1950-ம்ஆண்டின் தொடக்கத்தில் வெளியாகிவிடுமென்று நம்புகின்ருேம்.

மேற்காட்டிய கத்தோலிக்க வாசகப்புத்தகங்கள் எல்லாம் எங்கள்பாடசாலைகளிற் கற்பிக்கப்பட வேண்டுமென்று மகாவந்தனைக்குரிய மேற்றிராணிஆண்டவர் அவர்கள் நிபந்தனையிட்டிருக்கின்ருர்கள்.

கத்தோலிக்க சிறுவர்களுக்கென்றே விசேஷவிதமாக வகுக்கப்பெற்று அச்சேற்றப்பெற்றிருக்கும் இப்புத்தகங்களைத் தாங்களும் மனப்பூர்வமாக வரவேற்று ஆதரிக்கவேண்டுமென்று அன்புடன் வேண்டிநிற்கின்றேம்.

மனேஜர்
அர்ச். சூசையப்பர் அச்சியந்திரசாலை,
யாழ்ப்பாணம்.

## கருதினல்மார் திருச்சங்கம்

பரிசுத்த பாப்பரசர் காஸ்ரெல் கான்டொல்போவிலுள்ள தமது கோடைகால மாளிகையிலிருந்து இம்மாசத்திலே வத்திக்கானுக்குத் திரும்பியதும் கருதினல்மார்திருச்சங்கத்தைப் பூரண தொகையான அங்கத்தவர்களைக் கொண்டதாய் ஆக்கிவிடுமாறு புதிய கருதினல்மாரைத் தெரிந்து நியமனம் செய்தற்கான ஆயத்தங்கள் ஆரம்பமாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. திருச்சபையின் இளவரசர்கள் பதவிக்கு முதன்மைவாய்ந்த பதினைந்து குருசிரேஷ்டர்கள் பாப்பரசரால் தெரியப்படுவர். ஆனல், இவர்களின் நாமங்களை அறிவிப்பதற்கான பெரிய பகிரங்க கருதினல்மார்சங்கம் பரிசுத்தவருடத்தின்முன் கூட்டப்பட மாட்டாதாம்.

ஆனல், ரோமாபுரியின் பஸிலிக்காஸ் எனப்படும் மகாஆலயங்களின் திருக்கபாடங்களை நத்தார்த் திருநாளுக்கு முதனள் திறந்துவைக்கும் கருதினல்மாரைத் தெரிவிப்பதற்காக அடுத்த மார்கழிமாத ஆரம்பத்தில் பாப்பரசர் கருதினல்மார் சங்கத்தைக் கூட்டும்போது, புதிய கருதினல்மாரின் நியமனம்பற்றி அந்தரங்கமாகஆலோசிக்கப்படலாம். தற்போதையகனன்சட்டப்பிரகாரம் 70 பேரை அடக்கியதாய்இருக்க வேண்டிய கருதினல்மார் திருச்சங்கம் பூர்த்தியடைய இன்னும் 15 கருதினல்மார் அதிலே நியமனஞ் செய்யப்பட வேண்டும். ஆனல், கருதினல்மார் திருச்சங்க அங்கத்தவர்கள் தொகையை நூறுபேராக அதிகரிக்கும்படி செய்வதற்காகப் பாப்பரசர் மேலும் முப்பது புதிய கருதினல்மாரை நியமனஞ்செய்வதுபற்றி ஆலோசித்துவருவதாக அறிவிக்கப்படுகிறது., ஏனெனில், கருதினல்மார்தொகை எழுபதாக இருக்க வேண்டுமென இற்றைக்கு மூன்று நூற்ருண்டுகளுக்குமுன் குறிக்கப்பட்டதுமுதல் 30 கோடி கத்தோலிக்க மக்களால் பெருக்கமடைந்துள்ள திருச்சபையின் தற்போதைய தேவைகள் எவ்வளவோ அதிகரித்திருக்கின்றன.

கருதினல்மார் திருச்சங்கம் சம்பந்தப்பட்ட விஷயங்களிலே தற்போதைய பாப்பரசர் நவமான கருமங்களைச் சாதித்துப் பிரக்கியாதிபெற்றிருக்கிருர். 1946-ம்ஆண்டுமாசிமாதம்நிகழ்ந்தஅச்சங்கத்தின் கடைசியான கூட்டத்திலே இத்தாலியர் அல்லாத 28 கருதினல்மாரை நியமனம்செய்து முதன்முறையாகச் சங்கத்தில் இத்தாலியர்அல்லாத பிறசாதிக் கருதினல்மாரே கூடிய தொகையினராய் இருக்கும்படி செய்தார். முதன்முறையாக ஓர் சீனக் கருதினலையும் ஆக்கினர். கடந்த நூறு வருடங்களிலும், விசேஷமாகத் தற்போதைய பாப்பரசரின் ஆளுகைகாலத்திலும் திருச்சபையின் கொள்கையானது கருதினல்மார் திருச்சங்கத்தின் சர்வதேசபோக்கை அதிகரிக்கச்செய்வதாகவே இருந்துவருகிறது.

இற்றைக்கு எழுபது ஆண்டுகளுக்குமுன் கருதினல்மாரில் ஐரோப்பியர் அல்லாதார் ஒரேயொருவர் தானும் இருக்கவில்லை. ஒன்பதாம் சிங்கராய பாப்பானவரே ஐரோப்பியர் அல்லாத முதற்கருதினலை நியமனஞ்செய்தார். தற்போதைய கூடிய தொகையான எழுபதுக்குமேல் கருதினல்மார் தொகை அதிகரிக்க வேண்டுமென்று அவர் நிர்ணயிப்பாரானல், இன்னும் அநேக கருதினல்மார் ஆசியாவிலும், தீவிரமாகச் திருச்சபை பரந்துகொண்டிருக்கின்ற அமெரிக்க, ஆஸ்திரேலிய கண்டங்களிலும் நியமனஞ்செய்யப்படுவார்களென்பது நிச்சயம்.

## மரணசங்கதி

முல்லைத்தீவைத் தனது வாசஸ்தானமாகக்கொண்ட திரு. சூசைப்பிள்ளை மனுவேற்பிள்ளை அவர்கள் சிலமாத காலம் நோய்வாய்ப்பட்டிருந்து இம்மாதம் 9-ந்திகதி புதன்கிழமை இரவு மரணத்திரையில்மறையலாயினர். மரிக்கும்போது இவருக்கு வயது 97. இவர் வயதளவில் வயோதிபராயினும் செயலளவில் வயோதிபரன்று. தனது இளம்பிராயத்தில் இங்குள்ள தபாற்கந்தோரிற் சிலகாலம் இவர் கடமைபாற்றியபின் இளைப்பாறியிருந்தார். சாந்தம், தயை,பொறைமுதலிய சீரிய குணங்கள்வாய்ந்த இவர் ஊரவருள் நடக்கும் பிணக்குகளைத் தீர்க்கும் ஓர் உள்நாட்டுநீதிபதிபோல் இருந்தார். பரோபகாரசேவை, சமூகத்தொண்டு ஆதியவற்றில் ஈடுபட்டு யாவரையும் ஒற்றுமைபாய் வாழும்படிசெய்தார். கடவுட்பக்தியுடையோராய்த் தமது வேத கடமைகளைச் சரிவரநிறைவேற்றிவந்தார். இவரின் சடலம் அடுத்தநாட் சாயந்தரம் விசித்திர வேலைப்பாடமைந்த ஓர் பேழையில் வைத்து முல்லைத்தீவுக்கட்டளைக் குரவர் துக்கசங்கீதம்பாடிக் கடைசிஆசீர்வாதம்கூறிநிற்க, திரளான இனசனர் ஊரவர்கூடியசமூகத்திலே சேமக்காலையில் பூமாதானம் செய்யப்பட்டது.

R. I. P.

K. M.

## மரியாயின் சேனை

### 3-ம் அதிகாரம்

(முன்தொடர்ச்சி)

3. —இங்கே இந்தஇலட்சியங்களையும், வேலைத்திட்டங்களையும் கொண்ட ஸ்தாபனங்கள் வேறு இருக்கின்றன. ஆகையால் இதுஎன் ?

இலட்சியங்களும், வேலைத்திட்டங்களும் மலிந்துகிடப்பது உண்மைதான். காகிதமும், எழுதும்கருவியும் இருந்தால்போதும். அழகியவேலைத்திட்டமொன்றைக் கணப்பொழுதில் வகுத்துவிடலாம். முக்கியமான அலுவல்களை மேற்கொண்டிருக்கும்ஸ்தாபனம் ஆத்துமங்களுக்காகப்போராடும் உன்னத உத்தேசமுள்ள ஸ்தாபனம் சேனைஒன்றுதான் என்பதற்கில்லை. அவைகள் ஆயிரக்கணக்காயிருக்கின்றன. ஆனல், தங்கள் அப்போஸ்தலத்துவம் இன்னதென்று திட்டவட்டமாய் நிர்ணயித்திருக்கும் ஸ்தாபனங்கள் சொற்பம். அவற்றுள் சேனையும் ஒன்று. சுற்றுப்புறங்களில் நன்மைசெய்ய வேண்டுமென்று அங்கத்தினர்களைப் பொதுவாகக்கேட்கும் வரையறுக்கப்படாத சேவைகளையே அதுஏவும். மேலும அவைகள் சாமானிய கத்தோலிக்கத்தைச்சார்ந்தவை.கத்தோலிக்கஊழியத்தை அவ்வளவுசார்ந்தவையல்ல. ஆனல் திட்டவட்டமான வாராந்தவேலை அறிக்கை, திட்டவட்டமானசாதனை இவைகளையேசேனை தன் இலட்சணங்களாகக்கொண்டிருக்கிறது. இறுதியாக, சேனை தனது கிரமந்தவருதமுறையை மரியாயுடன் ஒன்றித்து நிர்வகிக்கிறது.

4. —அந்தஸ்தாபனங்களுக்கும், சேனைக்கும் சச்சரவுகள்ஏற்படும். நூற்றுக்கு எழுபத்தைந்துபேரோ அதற்கு மேற்பட்டோரோ கத்தோலிக்கரல்லாதாராய் அல்லது அநுசாரமற்ற கத்தோலிக்காராய் இருக்கும்இடங்களில் இத்தகைய வார்த்தைகளைக்கேட்பது எவ்வளவோ அதிசயம். இந்தஅந்தஸ்தைச் சகித்துக்கொண்டு வாழாஇருப்பவர் அந்தஇடங்களிலுள்ள மனிதரின் இருதயங்களில் ஏரோதுக்குச் சிங்காசனம்போட்டுக் கொடுக்கிருர்கள். கர்த்தரையும், அவருடைய அருமைத் தாயாரையும் நிரந்தரமாய் ஏழைக் கொட்டிலில் கழித்துவைத்துவிடுகிருர்கள். ஸ்தாபனங்கள்பல இருக்கின்றன. அவைகளுடைய பெயர்களோ அழகானபெயர்கள். ஆனல், சாதனைகளோ பூச்சியம். அடிக்கடி அத்தகைய ஸ்தாபனங்களை ஆதரித்தே சேனையை வேண்டாமென்கின்றனர். பட்டாளங்கள்பல இருக்கலாம். ஆனல் பகைவரின் பூமியில் ஒருமுழத்தைமுதலாய்ப் பிடிப்பதற்குச் சக்தியற்றவைகளாயும் இருக்கலாம்.

சேனைக்கு இடமிருக்கிறது. அதைப் பற்றிச் சந்தேகம்வேண்டாம். சேனையை ஓர்சிறிய இடத்தில் வேலை செய்யவிட்டு அதன்திறமையைப் பரீட்சித்துப்பார்ப்பதே விவேகம். அந்தப் பரீட்சை அறிவுறுத்தலாம். மேலும் ஒரேயொரு சிறுகிளையைச் சேர்ந்த அங்கத்தினர்கள் ஐந்துவாற்கோதுமை அப்பங்களைப்போலப்பெருகி, சகலஅவசியங்களையும்திருப்திசெய்ததும்போதாமல் மேற்கொண்டு மிகுந்தும்இருக்கலாம் (மத். 14: 16-21).

சேனை ஓர்பிரத்தியேக வேலைத்திட்டத்தைக் கொண்டுவரவில்லை. புதிய வேலைகளைச் செய்வதற்காகவும் அது முன்வரவில்லை. போதுமான அளவு முறைப்படி நடவாதிருக்கும் பழைய வேலைகளுக்கு ஓர் புதியமுறையைக் கொண்டுவருகின்றது. பழையமுறைக்குப்பதில் அந்தப்புதியமுறையை உபயோகிப்பது மனிதசக்திக்குப்பதிலாக மின்சாரசக்தியை உபயோகிப்பதைப் போலிருக்கும்.

ஆனபடியால் மரியாயின்பக்தர்களே, இனிமேல் வீண்ஆட்சேபனைகளைக் கூருது பின்வருபவைகளைச் சரிவரவாசித்தறிந்து மரியாயின்சேனையை ஒவ்வொருவிசாரணைப்பங்கிலும்உண்டாக்க முன்வருவீர்களாக. மரியாயின்சேனையில்பற்றுவைப்பீர்களாக. சேனையின்பற்றை அதனுடைய செபங்கள்விளக்குகின்றன. சர்வேஸ்பானிடத்திலும், சர்வேஸ்பரன் அவருடைய மக்கள்பால் கொண்டிருக்கும்நேசத்திலும் சேனைக்குக் கலங்காத நம்பிக்கைஉண்டு. இந்த நம்பிக்கையே அதன் உயிர்நாடி. தம்முடையபிரசைகளின்மூலம் அவர்மகிமைபெற விரும்புகிருர். ஆனதினல் சர்வேஸ்பரனையும் நாம்இத்தால் மகிமைப்படுத்தி மரியாயையும்நமதுமாதாவாக அங்கீகரிப்போமாக.

### 4-ம் அதிகாரம்

### மரியாள் நமது மாதா

மரியாளின் மக்களுக்குரிய உரிமைகளைப் பெறவிரும்புவோர் அவளை மாதாவாகக்கொண்டாடிமதிக்கவேண்டுமன்ருே! ஆதலின்சேனை மரியாளின் மாதுருவத்திலும் விசேஷபக்திகொண்டிருக்கிறது. அவளை மெய்யானமாதாவாக வணங்குகிறது. "இதோ ஆண்டவருடைய அடிமையானவள், உம்முடையவார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது" என்று மங்களவார்த்தை சொன்ன தேவதூதனுக்கு மரியாள் மறுமொழிசொன்னபொழுது அவள் கிறீஸ்துநாதருக்கு மாதாவானுள்.

நம்மெல்லோரையும் நேசித்துத் தமதுகடைசித்துளிபரிசுத்தம் இரத்தஞ் சிந்தித் தம்மைப்பலியாக ஒப்புக்கொடுத்த நமதுதிவ்வியஇரட்சகர் எங்களை அனுதபிள்ளைகளாய் விட்டுவிடாமல், கல்வாரிவியாகுலங்களுக்கிடையில் மரியாளைநோக்கி: "ஸ்திரியே! இதோ! உன்மகன்" என்றும், அருளப்பரை நோக்கி: அருளப்பா! இதோ உன் தாய்என்றும் திருவுளம்பற்றினபொழுது அவள் நம்மனைவருக்கும் மாதாவானுள்.

யேசுநாதர் இந்தவார்த்தைகளை அருளப்பருக்குமாத்திரம் சொல்லவில்லை. தெரிந்தெடுக்கப்பட்ட சகலருக்கும் சொன்னுர். சம்மதத்தாலும், வியாகுலங்களாலும் இரட்சணியத்தில் பூரணமாய் ஒத்துழைத்து அந்தட்சணமே மரியாள் நம்முடைய பரிபூரண மாதாவானுள். உண்மையில் நாமெல்லோரும் அவளுடையபிள்ளைகள். ஆதலின்நாம் அதற்கொப்ப நடந்துகொள்ள வேண்டும். மேலும்நாமெல்லோரும் சின்னஞ்சிறியவர்கள். ஆதலால் முற்றிலும் அவளுடைய சம்ரட்சணையில் இருந்துவரவேண்டும். உண்ணஉணவு வேண்டுமெனில், உபதேசம்வேண்டுமெனில், உரோகங்கள் குணமாக வேண்டுமெனில், சஞ்சலங்களில் தேறுதல்வேண்டுமெனில், சந்தேகங்கள் தெளிய வேண்டுமெனில், வழியறிய வேண்டுமெனில்,வழிதவறுங்கால் மீண்டும் வழிசேர வேண்டுமெனில் நாம் அவளையே நாடவேண்டும். நம்முடைய மூத்தசகோதரன் யேசுவைப்போல வளர்ந்துபாவத்தைப்பொருதிவெல்லும் அவளுடையஅலுவலில் அவருடன் ஒத்துழைப்பதற்கேதுவாக நாம் எப்பொழுதும் அவளுடைய பரிபூரண பராமரிப்பில் இருந்துவரவேண்டும்.

நாம்மரியாயின் மாதுருவத்தைப்பற்றி இடையருது தியானிக்கவேண்டும். அவ்விதஞ்செய்தால் மரியாளின் மாதுருத்துவதொழிலில்விசுவாசம்அதிகரிக்கும். விசுவாசம்அதிகரித்தால் நம்பிக்கையும், நம்பிக்கைஅதிகரித்தால் சிநேகமும் அதிகரிக்கும். நம்பிக்கையின் ஸ்திரமும், சிநேகத்தின் ஆர்வமும் கிரிகைகளாக மாறும். அப்பொழுது நாம் மரியாளின் மெய்யான பிள்ளைகளாவோம். மெய்யான பிள்ளைகளின் உரிமைகளுக்குப் பாத்திரவான்களாவோம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

1949-ம் ஆண்டு
கார்த்திகை மாசம்

| | | |
|---|---|---|
| வெ | 25 | அர்ச். சுத்தரீனம்மாள், க. வே. |
| சனி | 26 | அர்ச். லேயோனுட், அ. |
| ஞா | 27 | ஆகமனகாலத்தின் 1-ம் ஞாயிறு—அர்ச். யாகப்பர், வே. |
| திங் | 28 | அர்ச். சின்னமுடியப்பர், த.வே. |
| செ | 29 | அர்ச். சத்துர்னீனுர், மே. |
| புத | 30 | அர்ச். பெலேந்திரர், அ. |
| | | மார்கழி மாசம் |
| வி | 1 | அர்ச். எலிசியார், மே. |

சத்தியவேத
பாதுகாவலன்
1949-ம் ஆண்டு
கார்த்திகை மாசம் 24-ந் திகதி

## ஆகமனகாலம்

ஆகமனகாலமென்பது இருளிலிருந்துகொண்டு வெளிச்சத்தை எதிர்பார்க்குங்காலம். தேவவார்த்தையானவர் உலகத்திலே மனிதாவதாரஞ் செய்தநாளை உத்தமவிதமாய்க் கொண்டாடுவதற்குமுன் செபத்தாலும், தபத்தாலும் ஆயத்தஞ்செய்யும்படி திருச்சபை எம்மைத் தூண்டுகிறது. இவ்வாறு ஆயத்தஞ்செய்யும் காலத்திற்கே "ஆகமனகாலம்" அல்லது "வருகையின் காலம்" என்றுபெயர்.

வாக்குத்தத்தஞ் செய்யப்பெற்ற மெசியாவின் வருகைக்காகத் தேவப்பிரசைகள் பல்லாயிரம்வருடங்களாக ஆவலோடு எதிர்பார்த்திருந்தார்கள். அவர் வராமல் உலகம் வரட்சியுற்று இருளின் குருட்டாட்டத்திலும், மரணநிழலிலும் கிடந்துஉழன்றது. சீயோனின் அழுகைக்கூக்குரலும், அதன்நிர்ப்பாக்கிய அலறலும் பரிதாபக்ரமாய் இருந்தன. மனுக்குலம் கடவுளைவிட்டகன்று, பாவச்சேற்றில் ஆழ்ந்துகிடந்ததை நினைத்து இசையாஸ்தீர்க்கதரிசி புலம்புவதைக்கேட்டு உருகாதவர் யார்? இவ்வாறு ஆயிரக்கணக்கானவருடங்களாக இவ்வுலகத்தை ஆயத்தச்செய்யச் சர்வேசுரன் திருவுளமானதேன்? மனுக்குலம் தான் கட்டிக்கொண்டபாவத்தின் கொடுமையையும், தனக்குற்ற துன்பங்களையும், கடவுளின் அருளின்றேல் தனக்கு ஏற்படக்கூடிய கதியையும் நன்ருக உய்த்துணர வேண்டும், அவற்றினின்றும் மீட்பைக்கண்டடைவதற்காக வாக்குப்பண்ணப்பெற்ற இரட்சகர்பேரிலுள்ள நம்பிக்கைஉறுதியடையவேண்டுமென்றுமே.

மனுக்குலத்தின் இரட்சணியத்திற்காக மெசியாஸ்தோன்றிய மகாசம்பவத்தை வருடந்தோறும் நினைத்துக்கொண்டாடுகின்ற விசுவாசிகளும் ஒருசிறு அளவிலாவது தங்கள் முன்னோர்களைப்போல மிகுந்த ஆவலுடன் அவரதுவருகைக்காகஎதிர்பார்த்துத் தக்கவிதமாய் ஆயத்தஞ்செய்யவேண்டுமென்று திருச்சபைபோதிக்கின்றது. ஆதலின் இரண்டுநோக்கங்கள் நமக்கு இருக்கவேண்டும். ஒன்று, நாம் பாவங்களினுல் சர்வேசுரனை அவமதித்து அவர்நம்இருதயத்தில் எழுந்தருளிவருவதற்கு இடையூருக இருந்ததைநினைத்து மனஸ்தாபசிந்தனையினுல் நம்முடைய இருதயத்தைப்பரிசுத்தப்படுத்துவது. மற்றொன்று, உலகஇரட்சகர் ஞானவிதமாய் மறுபடியும் உலகில்தோன்றி மக்கள் இடையே தம்சுவிசேஷத்தால் வாசஞ்செய்ய வேண்டுமெனப் பெரிதும்ஆசிப்பது. கருணை நிறைந்தஆண்டவரின் வருகையை எதிர்நோக்கி, உலகமுடிவில் மகிமையோடு அவரிடம் போய் அவரோடு ஐக்கியமாவதில்தான் ஆகமனகாலத்தின் கருத்தெல்லாம் அடங்கியிருக்கிறது. செபம், சுயபரித்தியாகம் முதலியவற்றைப் பயின்று இவற்றிற்குஆதாரமாகத்திவ்விய பூசைப்பலியை அனுதினமும் ஒப்புக்கொடுப்பது மற்றெல்லா ஞானமுயற்சிகளிலும் சிறந்ததாகும்.

ஆகமனகாலத்தைக் கொண்டாடும்வழக்கம் நான்காம்நூற்ருண்டிலேயே இருந்தது. அப்போது இதனையும் ஓர்தபசுகாலமாகவே மதித்துவந்தனர். கர்த்தரின்வருகையைத் தேவப்பிரசைகள் நாலாயிரம்வருடங்கள் எதிர்பார்த்திருந்ததின் ஞாபகமாக ஆகமனகாலத்திற்கு நான்கு வாரங்களைத் திருச்சபைஏற்படுத்தியிருக்கிறது. இந்நான்குவாரங்களிலும் ஆளப்படும் வேதவாக்கியங்கள் பழையஏற்பாட்டில் தெரிந்துகொள்ளப்பட்ட பிரசைகளின் மனேநிலையை நம்மிலும் ஒருவாறு பிறப்பிப்பனவாகும்.

## பத்திமாநாயகி எழுந்தருளினர்

பண்டத்தெருப்பு, பத்திமாகிரி விசாரணைப்பங்குக் குரவரான வண. ஹென்றி ஜெஸ்லான்ட் சுவாமியவர்கள் போர்த்துக்காலிலிருந்து எப்போது கொண்டுவருவாரோவென யாழ்ப்பாணக் கத்தோலிக்கமக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த பத்திமா நாயகியின் சீவிய பரிமாணமுள்ள அழகிய திருச்சுரூபமானது இம்மாசம் 12-ந் திகதி கொழும்புவந்து சேரலாயிற்று. இத்திருச்சுரூபத்தைக் கொண்டுவருமாறு விசேஷ தூதாகப் போர்த்துக்கால் சென்றிருந்த சுவாமியவர்கள் அந்நாட்டில்தங்கியிருந்தபோது பத்திமாபதியில் தேவதாயார் காட்சிகள் அருளிய புனித்ஸ்தலத்தையும், அங்குள்ள புண்ணிய திருக்ஷேத்திரத்தையும் தரிசிக்கும் பாக்கியத்தை மாத்திரமல்ல, ஆனுல் மாதாவின் காட்சிபெற்ற பிரான்சீஸ், யாசிந்தா எனும் பிள்ளைகளின் பெற்றேரையும் கண்டு சம்பாஷிக்கும் சலாக்கியத்தையும் பெற்றுக்கொள்ளலாயினர். சுவாமியவர்கள் பத்திமாபதியைக் கடைசிமுறையாகத் தரிசித்ததினம், சென்ற ஐப்பசி மாதம் 13-ந் திகதியாகும். அப்பதியில் மாதாதமதுகடைசியான காட்சியை அருளிய வருடாந்த தினம் இதுவேயாகும். யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்பெற்ற மாட்சிவாய்ந்த இச்சுரூபத்தை அன்றையதினமே பத்திமாவையடக்கி... மேற்றிராணியாரும் ஆசீர்வதித்தருளினர். போர்த்துக்காலிலே சுரூபங்கள் செய்வாருள் மிகப் பிரக்கியாதி வாய்ந்த சிற்பி ஒருவரால் இது விசேஷவிதமாகச் செய்யப்படலாயிற்று. இவர் பத்திமாநாயகியின் சுரூபங்கள் செய்வதிலே பெரிதும் கைதேர்ந்தவர்.

கொழும்பிலிருந்து திருச்சுரூபமானது இம்மாசம் 13-ந் திகதி ஞாயிற்றுக்கிழமைகாலை றெயின் மார்க்கமாய்க் காங்கேசன்துறை வந்துசேர்ந்ததும் அங்கு பெருந்திரளான கத்தோலிக்கமக்கள் சமுகமாயிருந்து, பக்திப்பரவசத்துடன் அதை நல்வரவேற்று அலங்கார ரதமொன்றில் எழுந்தருளச்செய்து ஊர்வலமாக ஊறணி அர்ச். அந்தோனியார் ஆலயம் கொண்டுசென்ருர்கள். அங்கேவைத்து அது பத்திசெய்யப்பெற்றபின் இளவாலை, திருக்குடும்ப கன்னியர்மடம் கொண்டு செல்லப்பெற்றுப் பின்னர் அன்றுபிற்பகல் 4 மணியளவில் யாழ்ப்பாணக் குடா நாட்டின் பலபாகங்களிலுமிருந்து போய் ஒன்றுகூடிய மாதா பக்தர்கள் அங்கிருந்தும் பத்திமாஅன்னையை மகாசுற்றுப்பிரகாரமாய் ஒலிபரப்பி மூலம் செபமாலை ஓதிக்கொண்டு, பெரிதும் பத்தி அருட்சிக்குரியவிதமாய் பத்திமாகிரி போய்ச்சேரவே, அங்கு நம் மேற்றிராணியாண்டவரின் பதிலாளியாய் அதிவண. ஜி. குருசாமி சுவாமியவர்கள் மற்றுங் குருமார் சமேதராய்க் காத்துநின்று, மாதாவை வரவேற்றுச் சிங்கார பீடமொன்றில் எழுந்தருளச் செய்ததும், வண. ஜெஸ்லான்ட் சுவாமியவர்கள் செய்த சிறு பிரசங்கத்தைத் தொடர்ந்து திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்படலாயிற்று.

அதன்மேல் பெரியபீடத்தின் மீது திருச்சுரூபம் ஸ்தாபிக்கப்பெற்றுப் 10 மணி தொடக்கம் காரணிக்க விளக்கங்களுடன் செபமாலை ஓதியும், கீதங்கள் பாடியும், செவிகுளிரும்படியான பிரசங்கங்கள் கேட்டும், நடுச்சாமத்தின்போது வண. ஜெஸ்லான்ட் சுவாமியவர்கள் இளவாலைக் கன்னிகா மடத்துப் பாடகர் குழாமின் துணையோடு நிறைவேற்றிய பாடற்பூசை கண்டும், திருவிருந்தருந்தியும் மாதா பக்தர்கள் காண்பித்து நின்ற ஞானமனேகர பக்திப் பரவசத்தாலே அப்பதி முழுவதும் பத்தியாமயமாகக் காட்சியளித்ததெனில் மிகையாகாதென்க!

## பிரியதத்த வங்கி

| | |
|---|---|
| **பிரியதத்தம்** | |
| இதுவரையிற்சொல்லியது | 21,05,677 |
| இவ்வாரஞ் சொல்லியது | 34,634 |
| மொத்தம் | 21,40,311 |
| **செபமாலை** | |
| இதுவரையிற்சொல்லியது | 1,64,618 |
| இவ்வாரஞ் சொல்லியது | 4,066 |
| மொத்தம் | 1,68,684 |

குறிப்பு:— இம்மேற்றிராசனத்துள் அடங்கிய பாடசாலைப்பிள்ளைகளாற் சொல்லப்படும் பிரியதத்த, செபமாலைத் தொகைகளைப் பிரிய தத்த... அனுப்பிவைக்கு... கேட்டுக்கொள்ளுகிறோம்.

## தலைமை ஆசிரியருக்கு அறிவித்தல்

### பாடசாலைத்தவணைகள்

1950-ம் ஆண்டு எல்லாக் கத்தோலிக்கபாடசாலைகளிலும் அனுசரிக்கப்படவேண்டிய பாடசாலைத் தவணைகள் கீழே குறிக்கப்பட்டிருக்கின்றன:

| | |
|---|---|
| 1-ந்தவணை: | 9-1-50—28-3-50 |
| 2-ந்தவணை: | 3-5-50—11-8-50 |
| 3-ந்தவணை: | 4-9-50—7-12-50 |

வைகாசி 30, ஆனி 8, ஆடி 17, கார்த்திகை 9 இவை பகிரங்கவிடுமுறைநாட்கள் ஆதலால் இத்தேதிகளில் பாடசாலைநடைபெறக்கூடாது.

வைகாசி 18; ஆனி 30—ஆடி 3; ஐப்பசி 11—16 இவை எல்லாப் பாடசாலைகளுக்கும விடுமுறை காலமாகும்.

1950-ம்ஆண்டில் தத்தம்பாடசாலைகளில் அனுசரிக்கப்படவிருக்கும் அத்தியாவசியமான விசேஷவிடுதலை நாட்கள இருப்பின் அவற்றைக்குறித்துக் காலதாமதமில்லாது கட்டளைச் சுவாமியார்மூலம் அனுப்பிவைக்கும்படி தலைமைஆசிரியர் எல்லோருங் கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

விசேஷ கவனிப்பு:—1-ந்தவணையில் ஆகக்குறைந்தது 57 பாடசாலை நாட்களும், 2-ந்தவணையில் 62 நாட்களும், 3-ந்தவணையில் 61 நாட்களும இருக்கத்தக்கதாகப் பார்த்துக்கொள்வது தலைமை ஆசிரியரின் கடமையாகும்.

G. A. GURUSAMY, O. M. I.
Gen. Manager, R. C. Schools.
Jaffna, 22-11-49.

## சரித்திர பூர்வமான மருதமடு யாத்திரை

அரசாங்க சேவையில் அமர்ந்துள்ள கத்தோலிக்க பணியாளர்கள் செய்துகொண்ட வேண்டுகோளுக்கிசைந்து, போக்குவரத்து பகிரங்கவேலை மந்திரி காரியாலயத்தின் சேமவாழ்வுச் சேவைப் பகுதியால் ஒழுங்கு பண்ணப்பெற்ற மருதமடுத் திருயாத்திரையானது எவருமே பிரமிக்கும்படியாகப் பெரிதும் ஞானப்பரிமளிப்பாய் நடந்தேறியது. இந்த யாத்திரையிற் கலந்துகொண்ட ஆடவர்களும், பெண்மணிகளும் பிள்ளைகளுமான ஆயிரத்துஐஞ்ஞூறுபேரும் இம்மாசம் 12-ந் திகதி சனிக்கிழமைகாலை 8-35 மணிக்குப் 17 பெட்டிகள் இணைக்கப்பெற்ற விசேஷ யாத்திரை றெயின் வண்டியிலே, கண்டி மேற்றிராணியாரான மகாவந். றெஞ்ஞோ ஆண்டவரோடும், கொழும்பு அதிமேற்றிராணியாரின் பிரதிநிதியாகவந்த விக்கார் ஜெனறலான அதிவண. ஜி. போட்ரின் சுவாமியவர்களோடும் கொழும்பிலிருந்து தங்கள்யாத்திரையைத் தொடக்கினர்கள். போக்குவரத்து மந்திரியார் சேர் ஜோண் கொத்தலாவெல அவர்கள் பாராளுமன்ற அங்கத்தவர்கள்சிலரோடும் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அநேகரோடும் யாத்திரிகருடன் சேர்ந்துகொள்ளலாயினர்.

இந்த யாத்திரையின்போது பெரிதும் பாராட்டத்தக்க விதமாய் நடைபெற்ற சம்பவம் ஒன்றுயாதெனில், றெயில்வண்டியிலேயே பாவ சங்கீர்த்தனங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்க ஒழுங்குசெய்யப்பட்டிருந்தமையேயாகும். இதற்கென வண்டியின் கடைசிப் பெட்டி தனிமையாக விடப்பட்டிருந்தது. யாத்திரையிலே ஓர் பெரும்பகுதியின்போது மேற்றிராணியாண்டவரும் ஏனையகுருப்பிரசாதிகளும் யாத்திரிகரிடம் பாவசங்கீர்த்தனங்கேட்டபடியே சென்றுர்கள். திருப்பதிக்குவரும் போதும், பின்னர் அப்பதியிலிருந்து திரும்பும்போதும் யாத்திரையானது செபப்போக்கும், பயபக்திப் போக்குமுடையதாய் நடாத்தப்படலாயிற்று. இளங்கிறீஸ்துவபணியாளர்கள்வரிசையிலிருந்து தெரியப்பெற்ற தொண்டர்கள் யாத்திரைமுழுவதிலும் செப முன்னேடிகளாயிருந்து, யாத்திரிகரின் தேவைகளைக் கவனித்தார்கள். அன்று யாத்திரைறெயின்வண்டி நேர அட்டவணைப்படி சரியாகப் பிரயாணஞ்செய்தமையாலே அன்று பிற்பகல் 4-05 மணிக்கு மடுஸ்றேஷன் போய்ச் சேரலாயிற்று. அப்போது அங்கு தயாராய்நின்ற பஸ்கள் யாத்திரிகர் சகலரையும் ஒருமணி நேரத்தில் திருப்பதி கொண்டுபோய்ச் சேர்த்தன.

யாத்திரிகர் மடுப்பதிச் சந்நியிலே நமமேற்றிராணிஆண்டவராலும், மடுப்பதிப் பரிபாலன சுவாமிகளாலும், மன்னர் உபஏசன்றராலும் வரவேற்கப்பெற்றதும், அங்கிருந்தும் சேர். ஜோண் கொத்தலாவெல அவர்களும், மற்றும் அரசாங்க உத்தியோகஸ்தர்களும், குரு சிரேஷ்டர்களும் அவர்களுடன் சுற்றுப் பிரகாரமாகத் திருக்ஷேத்திரத்தை அடைந்தார்கள். அங்கே யாத்திரிகர் செபமாலை சொல்லி முடிந்ததும் பிரசங்கமும், சற்பிரசாத ஆசீர்வாதமும் நடந்தேறின. இரவு 10-30 முதல் திருமணித்தியாலம் நடைபெற்றது. ஞாயிற்றுக்கிழமை காலை கண்டி, யாழ்ப்பாண மேற்றிராணிமார்களாலே பெரிய பாடற் பூசைகள் நிறைவேறிய பின் மடுநாயகியின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் வழமையான பாதைவழியாக நடந்தேறியது. அதன்மேல்செபமாலைசொல்லிச் சற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்படலாயிற்று. அன்று காலை யாத்திரிகர்களுக்கு அதிவண. டி. ஜே. அன்ரனி சுவாமியவர்கள்நிகழ்த்திய ஓர் சொற்பொழிவிலே, இந்த யாத்திரையை வெற்றிகரமாக நடாத்திமுடிக்க போக்குவரத்து மந்திரியார் சேர். ஜோண் கொத்லாவெல அவர்கள் செய்துள்ளனவற்றிற்காக அவருக்கு நன்றிகூறினர். மந்திரியார் அதற்குத் தகுந்த பதில்அளித்தனர். மருதமடுத் திருப்பதியின் பெருமைவாய்ந்த சரித்திரத்திலேஓர்மந்திரியாரது ஆதரவில் யாத்திரை ஒன்று அங்கு நடாத்திவைக்கப்பெற்றமை இதுவே முதன்முறையாகு'.

---

❁ அமெரிக்கஐக்கியதேசசரித்திரத்திலே முதன்முறையாகத் திருமதி ஈயூஜின் ஆண்டேர்சன்எனும் பெண்மணி தென்மார்க்கு அரசினிடமாக அத்தேச ஸ்தானீகராகத்திரு. ட்றூமன் பிரசாதிபதியாலே நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றுர்.

---

ஆகமனகாலத்தின்

## 1-ம் ஞாயிறு

சுவிசேஷ வாசிப்பு

( லூக். 21 : 25—33 )

அக்காலத்தில் யேசுநாதர் தம்முடைய சீஷர்களை நோக்கிச் சொன்னதாவது: சூரியனிடத்தும் சந்திரனிடத்தும் நட்சத்திரங்களிடத்தும் அதிசயக்குறிகளிருக்கும். சமுத்திரமும் அலைகளும் இடுங்கலக்கமுள்ள இரைச்சலைப்பற்றிப் பூமியில் சனங்களுக்கு உபத்திரவமுண்டாகும். பூவுலகமுழுமையுஞ் சம்பவிப்பவைகளைக்கண்டு மனிதர் அச்சத்தினலும் தயங்குவார்கள். ஏனெனில், வானங்களின் வல்லமைகள் அசைக்கப்படும். அப்போது மனுமகன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தின்மேல் வருவதைக்காண்பார்கள். ஆனல், இவைகள் சம்பவிக்கத் தொடங்கும்போது நீங்கள் அண்ணாந்துபார்த்து உங்கள் தலையை நிமிர்த்துங்கள். ஏனெனில்; உங்கள் இரட்சணியஞ் சமீபித்திருக்கின்றது என்றூர். மீளவும் அவர்களுக்கு ஓர் உவமையைத் திருவுளமப்பற்றினர். அதாவது: அத்திமரத்தையும்மற்றச்சகலவிருட்சங்களையும் பாருங்கள். அவைகள் காய்க்கத் துவக்கும்பொழுது கோடைகாலஞ் சமீபித்திருக்கிறதென்றறிகிறீர்கள். அப்படியே நீங்களும் இவை சம்பவிக்கிறதைக்காணும்போது சர்வேசுரனுடைய இராச்சியம் சமீபமாயிருக்கிறதென்று அறிந்துகொள்ளுங்கள். இவை எல்லாம் நிறைவேறுகிறவரைக்கும் இச்சந்ததிஒழிந்து போவதில்லையென்று நிச்சயமாய் உங்களுக்குச் சொல்லுகிறேன். வானலோகமும் பூலோகமும் ஒழிந்துபோகும்; என்வாக்கியங்களோவெனில் ஒழிந்துபோகா என்று திருவுளம்பற்றினர்

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

---

## பிரசவ வைத்தியசாலை மிருசுவில்

இவ் வைத்தியசாலை கட்டப்பட்டு வரும் இடவிஷயமாய்ச் சமீபத்திலே "பாதுகாவல"னில் தோன்றிய "மிருசுவில் தபா"வில் காணப்பட்டுள்ள குறைபற்றிச் சிறிது கூற விரும்புகிறேன். இந்த வைத்தியசாலை கொடிகாம எல்லைக்குள் கட்டப்படுகின்றது. இதற்கான தகுந்த இடத்தைத் தெரிவுசெய்வதற்கெனச் சுகாதார வைத்தியரும் (M. O. H.), இப்பகுதிக் கருமாதிகாரி (D. R. O.) அவர்களும், பாராளுமன்றத்திலே சாவகச்சேரிப் பிரதிநிதியவர்களும், திரு. எச் பெஞ்சமின் அவர்களும் தெரிந்து நியமிக்கப்பெற்றனர். இவர்கள் ஆங்காங்குசென்று பல இடங்களையும் பார்வையிட்டனர். அங்ஙனம் பார்வையிட்ட இடங்களில் ஆசிரியர் ஒருவர் பொதுநலனைக்கோரி நன்கொடையாக உதவ வாக்குப்பண்ணிய இடமும் ஒன்றுகும். ஆனல் M. O. H. அவர்களும், D. R. O. அவர்களும் மத்தியதானத்துக்கு அது சரியான இடமல்லவென்று தீர்மானித்து நால்வரும் ஏகமனதாகச் சம்மதித்தே தற்போதைய இடத்தைத் தெரிந்துகொ[illegible]கள். இ[illegible] அதிகம் த[illegible] இடங்கள் இ[illegible]

இருந்தபோதிலும் அவற்றை ஊரவர் கொடுக்க முன்வராமையே இந்த இடந் தெரிவுசெய்யப்பட்டதற்கான முக்கிய காரணமாகும்.

— மிருசுவில் வாசி

---

ஆசிரியர்களின்

## ஞானவொடுக்கம்

வருகிறமார்கழிமாதம் 18-ந்திகதி பின்னேரம்தொடக்கம் 22-ந் திகதி மட்டும் கொழும்புத்துறைத்தாபனத்தில் ஒரு ஞானவொடுக்கம் நடைபெறும். இதிற் பங்குபற்ற ஏலவே எமக்கு அறிவியாத ஆசிரியர்கள் உடனேதானே எமக்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

மடுப்பதியில் நடைபெற்ற ஞானவொடுக்கத்திற் பங்குபற்ருத ஆசிரியர்கள் எல்லோரும் இதிற் பங்குபற்றுவார்களென எதிர்பார்க்கிறோம்.

G. A. GURUSAMY, O. M. I.
Gen. Manager, R. C. Schools
Jaffna, 23-11-49.

---




உத்தரிப்புஸ்தல ஆத்துமாக்களின் அவதியைத்தீர்க்கும் சபை

சீஸ்நக்கர் மேற்றிராணியாரின் அங்கீகாரம்பெற்றுப் பரிசுத்த பாப்பரசரால் இரட்சகமாதாவின்சபைஎன்னும் மகாசபைக்கு உயர்த்தப்பட்ட இச்சபை பிரான்ஸ்தேசத்திலே மொன்ரிஜெயன் சிற்றூலயத்தில் முதன்முதலாக 1884-ம்ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. உத்தரிப்புஸ்தலத்து ஆத்துமாக்களின் அவதியைத்தீர்ப்பதே இச்சபையின் நோக்கமாகும்.

யாழ்ப்பாணத்திலும் இச்சபை வண. எம். பிளஷோசுவாமியவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. பின்னர் வண. ஈ. குருசோ விறதர் அவர்களும், வண. வி. உக்தின் சுவாமியவர்களும் இதை நடப்பித்துக்கொண்டுவந்தார்கள். ஆனல் காத்திராப்பிரகாரமான சிலசம்பவங்கள்காரணமாக இச்சபைவேலை இரண்டுவருடகாலமாக நிறுத்தப்பட்டிருந்தது. தற்போது இளவாலைத் திருக்குடும்பக்கன்னிகாமடத்தின்சிரேஷ்ட தாயார்அவர்கள் இவ்வேலையில் ஈடுபட்டிருக்கின்றூர். அவரே இந்தவேலையை இனிமேல் நடத்திக்கொண்டு வருவார்.

இந்தச்சபைக்குச்சேருமிடத்து என்ன நிபந்தனைகளை நிறைவேற்றவேண்டுமென்பது பழைய அங்கத்தவர்களுக்குத் தெரியும். அதாவது வருஷத்துக்குப் 10 சதம். நித்தியத்துக்கு 4 ரூபா காணிக்கையாக அனுப்பவேண்டியது.

சேரும் பணத்தைக்கொண்டு உத்தரிப்புஸ்தலத்திலே கைவிடப்பட்டிருக்கும் ஆத்துமாக்களுக்காகத் திவ்வியபூசைஒப்புக்கொடுக்கப்படுகிறது. ஆனல், இப்பூசைப்பலன்களில் அங்கத்தவர்களுக்குப் பங்குண்டு.

குறிக்கப்பட்ட காணிக்கைப் பணத்தை அனுப்புகிறவர்களுக்குப் படம் அல்லது அங்கீகாரப் பத்திரம்ஒன்று அனுப்பப்படும். மேலும் சபையின் இடாப்பிலே ஒவ்வொரு அங்கத்தவருடைய பெயரும் பதியப்படும்.

இனிமேல்இச்சபையின் புதிய தலைவருக்கே கடிதங்கள் அனுப்பப்படவேண்டும்.

மேல்விலாசம்:

To
The Director of the
Work of expiation
Holy Family Convent,
ILAVALAI.

குறிப்பு:—மரித்தவர்களினது பெயரின் முன் (+) சிலுவைஅடையாளம் போடப்படவேண்டும். கூட்டங்கள், குடும்பங்களுடைய பெயர்கள் பதியப்படமாட்டா.

---

### பிரசாதிபதிக்கு விருது

திரு. நீல் லின்ஹன் அவர்கள் சமீபத்திலே வாஷிங்ரன்நகரிலுள்ள வெண்மாளிகை சென்று திரு.ட்றூமன் பிரசாதிபதியின் பேட்டிபெற்றபோது, அவருக்கென்று பரிசுத்தபிதாவால் விசேஷ விதமாக ஆசீர்வதிக்கப்பெற்ற மெடல் ஒன்றை அவரிடம் கொடுக்கலாயினர் 'அதைப் பெற்றதும் பிரசாதிபதி பேருவகை எய்தினர். பரிசுத்த பாப்பரசரால் தமக்கென்று விசேஷ விதமாக ஆசீர்வதிக்கப்பட்ட மெடல் ஒன்றை அவர் பெற்றுக்கொண்டது இதுவே முதன்முறையாகும்'' என்று திரு. லின்ஹன் கூறுகின்றூர். இந்த மெடலுடன் பாப்பரசரால் ஆசீர்வதிக்கப்பெற்ற ஓர் செபமாலையும் இருந்தது. மெடலின் ஒருபக்கத்திலே திருக்குடும்பத்தின் உருவமும், மறு பக்கத்திலே பாப்பரசரின் பிரதிமையும் அமைந்திருக்கின்றன.

---


## வேத புத்தகங்கள்

| | |
|---|---|
| அர்ச். கூரேதார்சின்சரித்திரம் | 2-00 |
| ஞானமிர்த தடாகம் | 2-75 |
| ஞானஉபதேச தடாகம் | 2-75 |
| பிரதானமந்திரங்களின் வியாக்யானம் | 2-25 |
| தேம்பாவணி (3 காண்டம்) | 15-50 |
| திருவருஷம் | 3-75 |
| மாதாவின் மாலை ஆராதனை | 0-25 |

தாமஸ்ரோட்றீகோ அன்சன்ஸ்,
புத்தகவியாபாரிகள்,
கொழும்பு—13.


---

### கண்டிஅரசினர் ஆஸ்பத்திரி

கண்டிமேற்றிராணியாரது வேண்டுகோளின்பேரிலே கண்டிஅரசினர் ஆஸ்பத்திரியில் நோயாளரைப் பராமரிப்பதற்கெனச் சென்றஆவணிமாதம் 12-ந்திகதி கொழும்புவந்துசேர்ந்த அமெரிக்க கன்னிகாஸ்திரீமார் மூவரும் சென்ற ஐப்பசிமாசம் 3-ந்திகதியன்று ஆஸ்பத்திரிசென்று அங்கேதங்களுக்கு உதவப்பெற்ற நிவாசத்தில் அமர்ந்து பிரசவவாட்டிலே கடமைபார்த்துவருகின்றூர்கள். பிந்த வேறுமூன்று கன்னியாஸ்திரிமாரும் வந்துசேரவே தற்போது ஐவர் கடமைபார்த்துவருகிறூர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யப்பானும் :: :: கைத்தொழிலும்.

## யுத்தத்துக்கு முன்னும் பின்னும்

யப்பானுக்குச் கதரிலும், கிராமக் கைத்தொழில்களிலும் நம்பிக்கை கிடையாது. அது மேல்நாட்டுப் பொருளாதார முறைகளையே ஒப்புக்கொண்டு அவற்றின்படியே நடந்துவந்திருக்கிறது. ஆனால் சென்ற உலகயுத்தத்தில் அதுதோல்வியையும், அநேக கஷ்டங்களையும் அடைந்தது. ரோக்கியோ நகரம் மட்டுந்தான் தப்பியது. யுத்தத்தில் அதன் தொழிற்சாலைகள் நஷ்டமடைந்ததுமல்லாமல் வாழ்வதே பெரிய பிரச்சினையாகிவிட்டது. முதலில் அதுயந்திரங்களை ஆதரித்தும், மின்சாரத்தின் உதவியினாலும் சீவித்துவந்தது. ஆனால் இப்பொழுதோ எல்லா வேலைகளும் கையினாலேயே செய்ய வேண்டியிருக்கிறது. எனவே, இந்த நெருக்கடியான சமயத்தில் மின்சாரத்தின் உதவியில்லாமல் செல்லக்கூடிய சிறிய யந்திரங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். கஷ்டமேற்படவேதினால்தான் புதிய புதிய சாதனங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன.

### குடிசைக் கைத்தொழில்:

சென்ற மூன்று வருடங்களில் யப்பானில் குடிசைக் கைத்தொழில்களில் ஏற்பட்டிருக்கும் அபிவிருத்தியை நாம் கவனிக்கவேண்டியதவசியம். யுத்தத்தில் எல்லாவெளிகளும் நாசமடைந்துவிட்டன. எனவே, சுமார் இரண்டரைவருஷங்கள்வரை யப்பானியர்கள் உணவில்லாமல் கஷ்டப்பட்டார்கள். கிழங்கு, விதை முதலியவைகளைத் தின்று காலத்தைக் கழித்துவந்தார்கள். இப்பொழுது ஆறு மாதத்திற்குத்தான் அரிசி உணவும், மற்றக்காலங்களுக்கு உருளைக்கிழங்கு, சர்க்கரை வள்ளிக் கிழங்குபோன்ற கிழங்குகளும் தின்று வாழ்ந்துவருகிறார்கள். கால்நடைகள் குறைந்துபோன காரணத்தினால் மனிதராலேயோ அல்லது ஒற்றை எருதைக் கொண்டோ இயங்கும்படியான யந்திரங்களைக்கண்டுபிடித்தார்கள். மண் வெட்டுதல், குழி தோண்டுதல் ஆகியவைகளுக்கும் சிறிய யந்திரங்களைத் தயாரித்திருந்தார்கள். வைக்கோலிலிருந்து கயிறு, செருப்பு, பாய், மேற்சட்டை, தொப்பி ஆகிய பலபொருள்களைச் செய்துகொள்கிறார்கள். அரிசியும், கோதுமையுந்தான் முக்கிய விளைபொருள்கள். அங்கு பருத்தி விளைவதில்லை.

### மணிக்கு 1,000 யார்:

மாவரைப்பதற்கென்று 'சிங்கர்' தையல் யந்திரத்தைப்போலக் காலால் இயக்கக்கூடிய யந்திரம் கண்டுபிடித்திருக்கிறார்கள். நூற்பதற்காக மணிக்கு 1,000 யார் நூற்கக்கூடிய இராட்டைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆனாலிங்கு அதே இராட்டையில் நூற்றுப்பார்த்ததில் மணிக்கு 400 முதல் 500 யார் வரையில்தான் நூற்கமுடிந்தது. யப்பானியர்கள் அதிலிருந்து மணிக்கு 1,000 யார்வரை நூற்றுக்காட்டியிருக்கிறார்கள். இதேமாதிரி இரண்டரை மூன்றுலட்சம் இராட்டைகள் அங்கு இப்பொழுது ஓடுகின்றன. பஞ்சைப் போலவே பட்டு, கம்பளி முதலியவைகளையும் இந்தஇராட்டையில் நூற்கலாம்.

### மூன்றுபோக விளைவு:

யப்பானில் 12 மாதங்களுக்கு மழை பெய்கிறது. அதன்காரணமாக மூன்று போகம் பயிரிடுகிறார்கள். யப்பானில் நிலம் குறைவாகையினால் மலைச்சரிவையும், அதேமாதிரி இதர இடங்களையும் நன்றாகப்பயன்படுத்திக்கொள்கிறார்கள். மல எருவை அதிகமாக உபயோகிக்கிறார்கள். ஒரே வாரத்தில் இதைத் தயாரித்துவிடுகிறார்கள். மலம் காய்ந்த பிறகு அதைத் தண்ணீரில் கலக்கி நேராகவே செடிகளுக்குப் பாய்ச்சுகிறார்கள். கோதுமையின் உமியைப் பாதி எரித்து அதையும் எருவாக உபயோகப்படுத்துகிறார்கள். இது அநுவசியமான கிருமிகளையும் கொல்லுந்தன்மையுடையது.

### மும் மடங்கு வேலை:

யப்பானியர்கள் கலைகளிலே விசேஷ பயிற்சி பெற்றிருப்பதுடன், வேலைசெய்யுந்திறமையும் அவர்களுக்கு அதிகம். இந்தியர்களைக்காட்டிலும் மும்மடங்கு அதிகவேலை செய்கிறார்கள். வேலை நேரத்தில் ஒரு நிமிஷங்கூட அவர்கள் வீணாக்குவது கிடையாது. அங்குள்ள சீதோஷ்ணமே சாதகமாக இருக்கிறது. படிப்பும் உயர்தரமாக இருக்கிறது மேலும் அங்குள்ள தொழிலாளியும் அதிகமாக வேலைசெய்கிறான்.

### எல்லாம் மூங்கிலாலே:

அங்கு வீடுகள் மூங்கிலாலும், புல்லினாலும் கட்டப்படுகின்றன. அவைகள் மிகவும் அழகாக இருக்கின்றன. மூங்கிலால் கூடை முதலிய வஸ்துக்கள் தயாரிக்கப்படுகின்றன. அவர்கள் தங்கள் வாழ்க்கையில் நூற்றுக்குஎண்பது விகிதம் மூங்கிலையே உபயோகிக்கிறார்கள். சித்திரவேலை அவர்களுக்கு இயற்கையாகவே அமைந்திருக்கிறது. பாய்களிலும், சிறிய கூடைகளிலும் பிச்சை எடுத்துத்திரியும் பையன்கள்கூடச் சித்திரம் வரைந்துவிடுகிறார்கள்.

### குடிசைத்தொழிலின் விருத்தி:

தினசரி 700 காகிதங்கள் தயாரிக்கக் கூடியவாறு சிறிய யந்திரங்கள் தயாரித்திருக்கிறார்கள். எண்ணெய் ஆட்டுவதற்காக எண்ணெய் வித்துக்களை மிதித்துச் சிறிது சூடாக்கி எண்ணெய் பிழிகிறார்கள். நூற்றுக்கு 45 விகிதம் எண்ணெய் இருக்கக்கூடிய வித்துக்களில் நூற்றுக்கு 42 விகிதம்வரையில் எடுக்கமுடிகிறது. அதன் விலை ஐம்பதுரூபாதான். கைத்தறிகளும் அங்கிருக்கின்றன. அவைகளில் தினசரி ஐந்து பாய்கள் நெய்கிறார்கள். இருபது பாய்கள்வரை நெய்யக்கூடிய தறிகளும் இருக்கின்றன.

### அமெரிக்க தொழிற்சாலைகள்:

யப்பானைப்போன்ற ஆலைத்தொழில்களில் நம்பிக்கையுள்ள தேசம்கூட வேறுவகையின்றிக் கையினால் இயங்கக்கூடிய யந்திரங்களைத் தயாரித்திருக்கிறது. ஆனால் இப்பொழுது அமெரிக்க ஐக்கியதேசமும் அங்கு தொழிற்சாலைகளை அமைத்துவருகிறது. ஒருறாத்தல் பருத்திகூட அங்கு கிடைக்கவில்லை. சனங்கள் பழைய துணிகளை வாங்கி அவைகளைப் பிரித்துத் தும்புண்டாக்கி, அதை மறுபடியும் நூற்றுத் துணி நெய்து உடுத்திக்கொள்கிறார்கள். அங்கு ஆலைகளிலே தயாரிக்கப்படும் பொருள்களெல்லாம் அமெரிக்கா, இந்தியா போன்ற பிறதேசங்களுக்கு அனுப்பப்படுகின்றன. யப்பானில் ஒருவருக்குச் சராசரி ஒன்றரையார் துணிதான் கிடைக்கிறது. சனங்கள் கிழிந்த துணிகளைக் கட்டிக்கொண்டுதான் திரிகிறார்கள். 200 வருடங்களுக்கு முன் அடிமைத்தனத்தின்காரணமாக நமக்கு என்ன நிலைமை ஏற்பட்டதோ, அதே நிலைமை யப்பானுக்கு இப்பொழுது இருந்துவருகிறது.

---

❀ பியேர் இம்மனுவேல் என்ற பிராஞ்சிய கம்யூனிஸ்த கவிஞரும், அவருடன் வேறுசில பிராஞ்சியஎழுத்தாளர்களும் கம்யூனிஸ்த கொள்கைகளை நிராகரித்துவிட்டதாக 'ஒசேர் வார்த்தோரே ரோமானோ' எனும்வத்திக்கான்பத்திரிகை தெரிவிக்கின்றது.

❀ திவ்வியபூசை வேளையிலே மெழுகுவர்த்திகளுக்குப்பதில் மின்சார லைற்றுகளை உபயோகிக்க அனுமதித்துச் செய்யப்பட்ட யுத்தகால இளக்காரத்தை திருச்சடங்காசார திருச்சங்கமானது புதியசட்டமொன்றாலே நிறுத்தித் தனிப்பூசையின் போது இரு மெழுகுவர்த்திகளும், பாடற்பூசையின்போது நான்கு மெழுகுவர்த்திகளும் பாவிக்கப்படவேண்டுமென நிரூபித்திருக்கிறது.

# இரு துருவங்கள்

[வாழ்க்கைச்சித்திரம்]

(முன்தொடர்ச்சி)

யோசேப் தன்கொள்கையை விட்டுக்கொடுக்கப் பிரியப்படவில்லை. அவன் தந்தையும் அவனைத்திரும்ப ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. கையிலிருந்த பணம் கரையலாயிற்று. ஆனால், அவன் உள்ளம்? அதுகடுமையாகத்தான் இருந்தது. விக்ரோறியா (அதுதான் அப்பெண்ணின் பெயர்) விடமிருந்து வந்த கடிதங்கள் அவனுக்குச் சொற்பசாந்தியேஅளித்தன. தற்கொலைசெய்து கொள்ளச் சிலமுறை எண்ணினான். ஆனால், "உயிர் உங்களுக்குச் சொந்தமல்ல. அது கடவுளுக்குச்சொந்தம்" என்று அவளிடமிருந்து வந்தகடிதங்கள் அவனைத் தடைசெய்தன. பல இடங்களில் வேலைபெற்றுக்கொள்ளப் பிரயாசப்பட்டான். ஆனால் வேலையே அவனுக்குக் கிடைக்கவில்லை. வயிற்றுப்பசி அவனைவாட்டியது. உணவுஇல்லாமலே பலமுறை காலங்கழித்தான். மறுநாளைக்கவலை அவனைவாட்டும்போதெல்லாம் ஆர்ச். மத்தேயுவின் சுவிசேஷவார்த்தைகள் அவன் நினைவுக்கு வரும். ஆகாயத்திலுள்ள பறவைகளைப்பாருங்கள். அவைகள்விதைப்பதுமில்லை, அறுப்பதுமில்லை, களஞ்சியங்களில்கொண்டுபோய்ச் சேர்ப்பதுமில்லை. ஆனால் உங்கள்பரமபிதா அவைகளைப் போஷிக்கிறார். நீங்கள் அவைகளை விட எவ்வளவோ மேலானவர்கள்." (மத். VI அதி. 26-ம்வசனம்) தன்னை அழகுபடுத்தவும் அவன் விரும்புவதில்லை. தாடிவளர்ந்தது. சந்நியாசிபோல் மாறிவிட்டான்.

அன்று கந்தர்பிறந்தநாள். அப்புனிதநாளிலே தன் தந்தைக்கும், மற்றவர்களுக்கும் வணக்கம்செலுத்தி அவர்கள் ஆசீர்வேண்டிக் கடிதம்வரைந்தான். பின்னர் அன்றுமாலை அவன்பெருங்கவலையோடு இருந்தபோது ஒருபெரியவர் தன்னைநோக்கிவரக்கண்டு எழுந்தான். அவர்நெருங்கிவந்ததும் யாரென்று கண்டுகொண்டு, "ஐயா! வணக்கம்" என்றான். "தம்பி, என்னசெய்கிறாய்? சுகந்தானே! ஏன் ஒருமாதிரியாக இருக்கிறாய்?" என்று அவர் வினவினார். யோசேப்தன் நிலைமையைக்கூறினான். அந்தப்பெரியவர் மனந்திரும்பிக் கத்தோலிக்கசமயத்தில் சேர்ந்தவர். எம். ஏ. படித்த பட்டதாரி. பெரியஅறிவாளி. ஒருகல்லூரியில் நல்லவருமானத்தில் பொருளாதாரநூல் பேராசிரியராக இருந்தவர். அப்பொழுதேஅவரை அவனுக்குநன்றாகத்தெரியும். அந்தக் காலத்திலே தமதுவருமானத்தில் ஒரு சிறுபகுதியைமட்டும்எடுத்துக்கொண்டு மீதியை ஏழைப்பையன்களைப் படிக்கவைப்பதில் அவர்செலவழித்தார். பிறகு "ஏழையின்உள்ளம் ஏழைக்குத்தான் தெரியும். ஆகவே, அதற்குத் தாமும் ஓர்ஏழையாகவேண்டும்" என்ற எண்ணங்கொண்டு பதவியை உதறிவிட்டுக் கையில்ஒடெடுத்துப் பிச்சைவாங்கி உண்டுவந்தார். கத்தறின் டி கியூக் டீ (Catharine de Hueck Dee) என்ற ருஷியசெல்வமாதுக்கு அதிமேற்றிராணியார் நெய்ல் (Neil) சொன்னதுபோல "உலகத்தை வெறுக்கவேண்டும். ஆனால் உலகை வெறுக்கக்கூடாது. மற்றவர்களைப்போஷிக்க நீ பிச்சைக்காரியாகவேண்டும். உன்னிடம் ஒன்றுமிருக்கக்கூடாது. அதனால், எல்லாவற்றையும் கொடுக்கவேண்டும். இதுவே எந்தக்கிறீஸ்தவனும் கொள்ளவேண்டிய மேலானஉத்தமகொள்கை." அதேபோல் அவர்தம்மை ஏழையாகமாற்றிய பெருந்தகை. அவரும் யோசேப்பைப் போல் தாடிவளர்த்திருந்தார். ஆனால் அவர்தாடி அநுபவத்தின் உண்மை. யோசேப்பின் தாடி ஆத்திரத்தின் சுமை. அவர்தாடி ஆராய்ச்சியின்முடிபு. அவன் தாடி ஆசையின்அலை. "தம்பி! இளமறி பயமறியாது. வாழப்போவதுநீ. அதைக்கட்டுப்படுத்துவது அறியாமை. [illegible] வளமிக்க சோலை [illegible]க்காடு. உன்சுகத்திற்காகத்தான் அவர்கள் செய்கிறார்கள். தம்பி! உன் எண்ணத்தைமாற்ற நான் விரும்பவில்லை. கடவுளைக்கையெடுத்து, அவர்திருவுளத்தை இரந்துகேள்" என்றுசொன்னார்.

புத்தாண்டுபிறந்தது. யோசேப்புக்கு அது புத்தாண்டாகத் தோன்றவில்லை. அவன்சிந்தனை வீட்டை நாடியது. ஆனால், அதுஅதிகநேரம் நீடிக்கவில்லை. அதுசிந்தனையின் கணநேர அலை. அங்ஙனமாக, சிலநாட்களின்பின் அவன் தந்தையிடமிருந்து ஒருகடிதம் வந்திருந்தது. அதைப்பிரிக்குமுன்னமே அவன்கை நடுங்கியது. தந்தையின்முடிபு. தந்தையின்குரல்...! ஆதியாகமத்திலுள்ள வாக்கியங்கள் அவன் மனதில் எழுந்தன. "அவர்கள் கடவுளின்குரலைக் கேட்டார்கள்......ஆதாமும்ஏவாளும் தங்களை மறைத்துக் கொண்டனர்." "விக்ரோறியா இல்லாவிட்டால் பூமிசபிக்கப்படும். வாழ்க்கை முள்ளும் புல்பூண்டுகளும்நிறைந்துவிடும். ஆனால், கடவுளின்சித்தத்தை நிறைவேற்றுவது சந்தோஷமல்லவா?" என்பதே அவன்மனதில் எழுந்தஎண்ணம். கடிதத்தைப்பிரித்தான். "விக்ரோறியாவை மறந்துவிடு"

அவன்உள்ளம் கண்ணாடிபோல் உடைந்துசிதறியது. நெஞ்சிலிருக்கும் நேரிழையாளை நீக்கவேண்டுமானால் நெஞ்சையே நீக்கவேண்டும். எனினும் சம்மதித்தான். கடவுள்உதவியால் மறந்தவீட்டைத் திரும்பவும்அடைந்தான். ஆனால், அங்குஅவன் நீடித்திருக்கவில்லை. திரும்பவும் தந்தையின் கோபத்திற்குஆளாகி வெளியேறினான். கடைசியாக அவன்வாழ்க்கை திரும்பியது. "கஷ்டப்படவே நீபிறந்திருக்கிறாய்" என்று யாரோ கூறுவதுபோல் இருந்தது. அப்போது சுவரில் இருந்த சிலுவையைப்பார்த்தான். அதில்அறையுண்டிருந்த யேசுவை நோக்கினான். அவர்அவனிடம் பேசுவதுபோல் தோன்றியது. "மகனே! இதில் அறையப்பட்டிருப்பது நான். இதன்பின்புறத்தில் ஒருகாலியிடம் இருக்கிறதே. அதில் யார்அறையப்படவேண்டும்?" என்று கேட்பதுபோல் தோன்றியது. "ஆண்டவரே, யார்உங்களை நேசிக்கிறாரோ அவர்தான்—ஏன் நான்விரும்பினால்...நான்தான்" என்று யோசேப்பின்உதடுகள் கூறின. அவன் வீட்டைவிட்டு வெகுதூரம் விலகிவிட்டான். பெற்றார், உற்றார், உடன் பிறந்தோர், ஊரெல்லாம் அவனைவிட்டு விலகிக்கொண்டேயிருக்கின்றன. ஆம் அவர்கள் ஒருதுருவம். இவன் ஒரு துருவம். காதலித்தமங்கையும் பிரிகிறாள். பிரிக்கப்பட்டாள். அவள்ஒரு துருவம். இவன்ஒருதுருவம். அவர்கள் வடதுருவம். இவன்தென்துருவம். —இருதுருவங்கள். இரண்டும் ஒன்று சேருமா?

---

❀ 1950-ம் ஆண்டின் மார்கழி மாசத்திலே ரோமாபுரியில் உலக கத்தோலிக்க சேவாமகாநாடு ஒன்று நிகழவிருக்கின்றது. இந்தமகாநாடு பரிசுத்த வருடத்திலே அந்நகரில் கூடும் சர்வதேச சனத்திரள்களுக்கெல்லாம் முடிசூட்டுவதுபோல் இருக்குமாம்.

❀ இத்தாலியிலே சாதாரண சிறைகுற்றவாளிகளுக்குப் பரிசுத்த வருடத்தில் மன்னிப்பு அருளவேண்டுமென்ற பிரேரணைக்குப் பாதகமாகச் செனற்சபை வாக்களித்தமையால், ரோமைநகரிலுள்ள றெஜினு கொயெலி எனும் சிறைச்சாலையில் இருந்துவரும் 700 மறியற்காரரும் சென்ற ஐப்பசி மாதம் 22-ந்திகதி உண்ணுவிரதம் அனுட்டித்தார்கள்.

❀ தனது கற்பைப் பாதுகாப்பதற்காகத் தன்உயிரைத் தியாகஞ்செய்த முத். மரியகொறெற்றி அம்மாளின் சீவியவரலாற்றைத் தெரிவிக்கும் சினிமாப்படமே சர்வதேச கத்தோலிக்க பிலிம் காரியாலயத்தின் இவ்வருட முதலாவது பரிசிலைப் பெற்றிருக்கின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்திரமண்டலப் பிரயாணம் சாத்தியமாகுமா?

"பூமிக்குமேலே 500 மைல்உயரத்தில் வாயுமண்டலமார்க்கமாக உலகத்தைச்சுற்றிவரக்கூடிய முதலாவது செயற்கைச்சந்திரன் ஐந்துவருடங்களுள் சிருஷ்டிக்கப்படலாம்; இந்தச் சந்திரன் வாயுமண்டலத்தில் பிரயாணஞ்செய்யக்கூடிய "றெக்கெற்" எனும் ஒரு ஆகாயபாணம்போ லிருக்கும்" என்பதாகப் பிரித்தானிய கிரகமண்டலஆராய்ச்சிச்சங்க அங்கத்தினரான திரு. கென்னத் டபிள்யூ கேற்லன்ட் அவர்கள் சமீபத்தில்எழுதிய கட்டுரை ஒன்றில் கூறியிருக்கிறார். அவர்மேலும் எழுதியிருப்பதாவது: செயற்கைச சந்திரனை ஐந்துவருடகாலத்துள் சிருஷ்டித்துவிடமுடியுமென்பது ஒருபாடசாலைப்பையனின் கனவல்ல. உத்தியோகபூர்வமான றெக்கெற் ஆராய்ச்சியில்ஈடுபட்டுள்ள அமெரிக்க விஞ்ஞானிகளும்,பிரித்தானியவிஞ்ஞானிகளும் ஏற்கனவே தாபித்திருக்கும் உண்மைகளை அடிப்படையாகக்கொண்டே இவ்விதம் மதிப்பிடப்படுகிறது.

கடந்த மாசிமாதத்தில் அமெரிக்காால் அமைக்கப்பட்ட ஒரு றெக்கெற்றானது "ஜேர்மன் வி 2" விமானமொன்றின் மூக்கிலிருந்துபுறப்பட்டுப் பூமிக்குமேலே வாயுமண்டலத்தில் 250 மைல் தூரம் ஊடுருவிச்சென்றது. யுத்தத்துக்குப்பிறகு நடத்தப்பட்ட இம்மாதிரியான பரீட்சைகளிலிருந்து மிகமுக்கியமானகாரியங்கள் பெறப்பட்டிருக்கின்றன. இந்தவிஞ்ஞான சான்றுகளின் உதவியுடன் 1954-ம்ஆண்டு என்னென்னபுரட்சிகரமான வெற்றிகளெல்லாம சாத்தியமாகுமென இப்பொழுது சொல்லமுடியும். அதாவது 1954-ம் ஆண்டுக்கிடையில் முதல்முறையாக உலகத்தைச் சுற்றிவரக்கூடிய றெக்கெற் ஒன்றைப்பூமிக்குமேலேவாயுமண்டலத்தில் 500 மைல்தூரம்வரையில்செலுத்த முடியும். இந்தத்தூரத்துக்குச் செலுத்தப்பட்டறெக்கெற்றானது ரேடியோக்கட்டுப்பாட்டு யந்திரத்தால் திருப்பியழைக்கப்படும்வரை பூமியைச் சுற்றிக்கொண்டேயிருக்கும்.

### மணிக்குப் 16,8000 மைல்

பூமியின் ஆகர்ஷணசக்தி வாயுமண்டலத்தில் ஒருகுறிப்பிட்டதூரம்வரைதான் எட்டும். இந்தத்தூரத்துக்கு றெக்கெற்றை அனுப்பவேண்டுமானால் அதுமணிக்கு 16,800மைல் வேகத்தில் செல்லவேண்டும். அந்தத்தூரத்தை அடைந்ததும் அதற்குமேற்கொண்டு எந்தச்சக்தியும் தேவைப்படாது. அதுஅங்கேயே நின்றுவிடும். இந்தநிலையில் அது காலவரையறையின்றிநிற்கும்போது அதுஉண்மையில் ஒருசெயற்கைச் சந்திரனாக மாறிவிடுகிறது. இந்தச்செயற்கைச்சந்திரன் பூமியைச் சுற்றிவரும்போது, ஒவ்வொரு 107 நிமிஷங்களுக்கு ஒருமுறை அதே இடத்தைக் கடந்துசெல்லுமென்று கணக்கிடப்படுகிறது.

ரேடியோக்கட்டுப்பாட்டு யந்திரத்தின் உதவியைக்கொண்டு வாயுமண்டலத்தை அடிப்படுத்தக்கூடிய இம்மாதிரி ஒருதிட்டத்தின் இராணுவமுக்கியத்துவம் சொல்லாமலே விளங்கும். எனினும், அணுச்சக்தியைப்போலவே றெக்கெற்றுகளும்பிரமாண்டமான நிர்மாணதிட்டங்களுக்குப் பயன்படுமெனவே தோன்றுகிறது.

### வாயு மண்டல ஆராய்ச்சி

பூமண்டலத்துக்கு அப்பாலுள்ள வாயுமண்டலத்தைப்பற்றிய இந்த ஆராய்ச்சியில், இப்பொழுது மூடுமந்திரமாகவிருக்கும் ஒருபிரதேசத்தைப் பற்றிப் பலஉபயோகமான செய்திகளை 'ரோபாட் ரேடியோ' ஆராய்ச்சிச்சாலைகள் வெளியிடுமென்பது திண்ணம். வானசாஸ்திரிகளுக்கு இந்தவாயுமண்டல றெக்கெற்றுகள் ஒருபுரட்சிகரமான நன்மையாக அமைவதும் சாத்தியம். ஏனென்றால், பூமண்டலம் வானசாஸ்திரிகளுக்கு எப்பொழுதுமேஒருபெரிய இடையூறாக இருக்கிறது. காற்று அசைவுகளால் அடிக்கடி பிரதிபிம்பங்கள் உருமாறிவிடுவதுடன் கிரகங்கள் நட்சத்திரங்கள் ஆகியவற்றைப்பற்றிய விபரங்களும் தெளிவற்றுவிடுகின்றன.

தூரதிருஷ்டிக்கண்ணாடிகளைத் தாங்கிச்செல்லும் றெக்கெற்றுகளைப்பற்றி நினைக்கும்போது நம்மனத்தில் என்னென்ன அதிசயமான காட்சிகளும், ஆச்சரியமானசந்தர்ப்பங்களும் உதயமாகின்றன. உதாரணமாக, இந்த வாயுமண்டலஆராய்ச்சியில் செவ்வாய்க்கிரகத்தின் மர்மம் துலங்கிவிடும். தானாகவே படம்பிடிக்கும் கமராக்கள் இந்தக்கிரகத்திலிருப்பதாகச் சொல்லப்படும் கால்வாய்கள், மரங்கள், செடிகொடிகள் ஆதியவற்றைப்பற்றிய மர்மத்தை ஒருநாளில் வெளியாக்கிவிடும். இதற்குப்பிறகு றெக்கெற்—தெலிவிஷனின் உதவியுடன் நாம்கிரகங்களுக்கு உல்லாசப்பிரயாணம்செய்து அங்குள்ள இயற்கைக்காட்சிகளைக் கண்டுகளிக்கலாம்.

### "வி 2" விமான அமைப்பு

ஒருமனிதனை ஏற்றிச்செல்லக்கூடிய றெக்கெற்றை அமைக்கும் திட்டம் விவாதப்பகுதியைத்தாண்டி நெடுநாளாகிவிட்டது. இம்மாதிரி ஒரு வாயுமண்டலக்கப்பலைக் கட்டமுடியும் என்று திரு. ஆர். ஏ. சிமித், திரு. எச். ஈறேஸ்ஆகிய இருபிரித்தானிய ஆராய்ச்சியாளர்கள் செயலளவில் செய்துகாட்டி இப்பொழுது மூன்று வருடங்களாகிவிட்டன. இந்தக்கப்பல் "ஜேர்மன் வி 2" விமானத்தின் அமைப்பை அடிப்படையாகக்கொண்டு கட்டப்பட்டது. பத்துநிமிஷநேரத்திலே மின்னல்வேகத்தில் வாயுமண்டலத்தில் இதுவரை அறியப்படாதிருக்கும் ஒரு உலகத்துக்குச்செல்லும் முதலாவது மனிதன் பலபரீட்சைகளில் தேறவேண்டியிருக்கும். வேகத்தினால் அவன் எவ்வாறு பாதிக்கப்படுவான்? பூமியின் ஆகர்ஷணசக்தி இல்லாதஇடத்தில் அவனுடைய தேகநிலை எப்படியிருக்கும்? வாயுமண்டலத்திலுள்ள ரேடியோசக்திகளினால் அவன் எவ்வாறு பாதிக்கப்படுவான்? ஆகிய இந்தவிஷயங்களெல்லாம் பரிசோதனைமூலம் அறியப்படும்

### பத்தாண்டில் சந்திரமண்டலம்

சந்திரமண்டலத்துக்குப் பிரயாணஞ்செய்ய வேண்டுமென்றகனவு இன்னும் பத்துவருடகாலத்துள் சாத்தியமாகிவிடும். இதுவரை பூமிக்குமேலே வாயுமண்டலத்தில் 250 மைல்தூரமே போயிருக்கும்நாம் 2,40,000 மைல் தூரத்திலுள்ள சந்திரமண்டலத்துக்குப் பிரயாணஞ்செய்வதுபற்றி எப்படிச்சிந்திக்கமுடியுமென்ற கேள்வி எழக்கூடும். அதற்கு மறுமொழி வேகந்தான். தற்போதையசாதனையைவிட ஐந்துமடங்கு அதிகவேகமாக—அதாவது மணிக்கு 25,000 மைல்வேகத்தில் வாயுமண்டலத்தை ஊடுருவிச்செல்லக்கூடிய ஒரு றெக்கெற்றை நிர்மாணிக்கமுடியுமானால் அது பூமியின் ஆகர்ஷணசக்தியை வென்றுவிடுமென்பதுடன் அது ஒருபோதுமேதிரும்பிவராது. உதவிக்கு எவ்விதசக்தியுமின்றியே அதுபிரயாணம்செய்துகொண்டிருக்கும். சந்திரமண்டலத்தைப் போய்ச்சேரக்கூடிய இந்த றெக்கெற்றை 370 தொன்நிறையில் நிர்மாணித்துவிடலாம்.

---

❀ கனடாதேச அரசாங்கம் பரிசுத்தஸ்தானத்தினிடமாகத் தனது ஸ்தானீகர் ஒருவரை நியமனஞ்செய்ய வேண்டுமென்றுகேட்டு அத்தேச பாராளுமன்றத்தில் ஓர் பிரேரணை கொண்டுவரப்பட்டிருக்கிறது.

❀ புதிய மேற்குஜேர்மன் அரசாங்கத்தினிடமாக அப்போஸ்தொலிக்க ஸ்தானீகராக மகாவந். அலோஷியஸ் முவெஞ்ச் மேற்றிராணியார் பரிசுத்தஸ்தானத்தாலே நியமனஞ் செய்யப்பெற்றிருக்கின்றார். இவரது நியமனத்தை அவ்வரசாங்கம் குதூகலத்துடன் வரவேற்றிருக்கிறது.

---

# விசுவாசப்பரப்புதல்சபை

## 1949

இவ்வருடம் விசுவாசப்பரப்புதல் ஞாயிறன்று யாழ்ப்பாண மேற்றிராசனத்தின் நானா விசாரணைப்பங்குகளிலும் விசுவாசப் பரப்புதலுக்கெனச் சேர்க்கப்பட்ட பணத்தொகை விபரம்வருமாறு:

| | | ரூ.—ச. | ரூ.—ச |
|---|---|---|---|
| வவுனியா விசாரணைப்பங்கு | | | |
| | மிஷன்ஞாயிறு சேர்ந்ததொகை | 29-26 | |
| | அங்கத்தவர்கள் கட்டணம் | 25-00 | |
| | கொடிவிற்பனவு | — | |
| | பாடசாலைகள் | 25-00 | 79-26 |
| மயிலிட்டி விசாரணைப்பங்கு | | | |
| | மிஷன்ஞாயிறுசேர்ந்த தொகை | 46-87 | |
| | அங்கத்தவர்கள் கட்டணம் | 13-13 | |
| | கொடிவிற்பனவு | 3-00 | |
| | பாடசாலைகள் | 37-00 | 100-00 |
| முல்லைத்தீவு விசாரணைப்பங்கு | | | |
| | மிஷன்ஞாயிறு சேர்ந்ததொகை | 42-50 | |
| | அங்கத்தவர்கள்கட்டணம் | 6-75 | |
| | கொடிவிற்பனவு | 7-35 | |
| | பாடசாலைகள் | 21-90 | 78-50 |
| இளவாலை சந்தியோகுமையோர்கோவில் | | | |
| | மிஷன்ஞாயிறு சேர்ந்ததொகை | 10-25 | 10-25 |
| மாதகல் விசாரணைப்பங்கு | | | |
| | மிஷன்ஞாயிறு சேர்ந்ததொகை | 36-00 | |
| | அங்கத்தவர்கள்கட்டணம் | 34-50 | |
| | கொடிவிற்பனவு | 6-75 | |
| | அர்ச். சூசையப்பர் ஆங்கிலபாடசாலை | 18-40 | |
| | அர்ச்.தொம்மையப்பர் பாடசாலை | 25-00 | 120-65 |
| காம்பன் விசாரணைப்பங்கு | | | |
| | மிஷன்ஞாயிறு சேர்ந்ததொகை | 30-15 | |
| | அங்கத்தவர்கள் கட்டணம் | 25-50 | |
| | கொடிவிற்பனவு | 2-05 | |
| | தமிழ்ப்பாடசாலை | 25-00 | |
| | ஆங்கிலபாடசாலை | 45-00 | 127-70 |
| அனுராசபுர விசாரணைப்பங்கு | | | |
| | மிஷன்ஞாயிறு சேர்ந்ததொகை | 33-00 | |
| | அங்கத்தவர்கள் கட்டணம் | 9-30 | |
| | கொடிவிற்பனவு | 5-00 | |
| | பத்திரிகைச்சந்தா | 10-00 | 57-30 |
| மிருசுவில் விசாரணைப்பங்கு | | | |
| | மிஷன்ஞாயிறுசேர்ந்ததொகை | 15-00 | |
| | அங்கத்தவர்கள்கட்டணம் | 1-50 | |
| | கொடிவிற்பனவு | 5-00 | |
| | பாடசாலை | 6-00 | 27-50 |
| இளவாலை—திருக்குடும்ப கன்னியர்மடம் | | 312-50 | 312-50 |
| நாவாந்துறைவிசாரணைப்பங்கு | | | |
| | மிஷன்ஞாயிறுசேர்ந்ததொகை | 40-15 | |
| | அங்கத்தவர்கள் கட்டணம். | 13-50 | |
| | கொடிவிற்பனவு | 9-00 | |
| | பாடசாலைகள் | 59-25 | 121-80 |
| வதிரி விசாரணைப்பங்கு | | | |
| | மிஷன்ஞாயிறு சேர்ந்ததொகை | 29-22 | |
| | அங்கத்தவர்கள்கட்டணம் | 40-50 | |
| | பாடசாலைகள் | 45-28 | 115-05 |

(தொடரும்)

J. A. RAJANAYAGAM, O. M. I.
Diocesan Director
Society for the Propagation of Faith

---

### தெங்குப் பொருட்கள்

தெங்குப்பொருட்களின்மீது விதிக்கப்படும் ஏற்றுமதிவரிகளைக் குறைப்பதுபற்றி மந்திரிசபை ஆலோசிக்கக்கூடுமென்று தெரிகிறது. 14-ந்திகதி தேங்காய்ப்பூ மில்சொந்தக்காரர் சங்கத்தின்வருடாந்தக் கூட்டத்தில் பேசியவர்த்தகமந்திரி திரு. எச். டபிள்யு. அமரசூரியா இதைப்பற்றி ஒருவாறு குறிப்பிட்டார். தெங்குப்பொருட்கள் மீது தற்போது விதிக்கப்பட்டுவரும் ஏற்றுமதிவரிகள் தெங்குப்பொருள் உற்பத்தியாளர்களுக்கு நன்மைசெய்வதாயில்லையென்பதே தமதுசொந்த அபிப்பிராயமென்று அவர் கூறினர். இவ்விஷயத்தை மந்திரிசபை சீக்கிரத்தில் பரிசீலனைசெய்யுமென்று தான்நம்புவதாக அவர்தெரிவித்தார் தற்போதைய ஏற்றுமதிவரிகள் போடப்பட்டபோது எதிர்பார்த்ததைவிட அதிகவருமானம் அரசினருக்குக் கிடைக்கிறதென்றுகூறிய திரு. அமரசூரியா மேலும் கூறியதாவது: எல்லாவற்றையும் அரசினர் எடுத்துக்கொள்வதென்றால் தென்னந்தோட்டங்களில் புதிய மரங்கள்வைத்துப் பயிரிடுவதற்கு தெங்குப்பொருள் உற்பத்தியாளர்களுக்கு நிதிஉதவி அளிக்கக்கூடிய ஒரு பிரத்தியேக நிதியை ஏற்படுத்தவேண்டும்.

### விளம்பரம்

வடமாகாண ஏஜண்டர் 1949-ம்ஆண்டு நவம்பர்மாதம் 29-ந்திகதி செவ்வாய்க்கிழமை மத்தியானம் 12 மணிவரைக்கும் தனக்குத் தேவைப்படும் 30,000 உடன் வெட்டப்பட்ட சீர்மைக்கிழுவந் தடிகள் (Gliricidia cuttings)வேண்டுவதற்கு ரெண்டர் (Tender) விண்ணப்பப்பத்திரங்களை ஏற்றுக்கொள்வார். குறித்த சீர்மைக்கிழுவந்தடிகள் உத்தரவிட்டதும், பத்துநாட்களுள் ஒப்படைக்கவேண்டும்.

விண்ணப்பப்பத்திரங்கள் அதற்குரிய மாதிரிப்பத்திரங்களில்(Forms) யாழ்ப்பாண ஏஜண்டரிடம்பெற்று அதன்மூலம் தங்கள் விண்ணப்பப்பத்திரங்களைத் தெரிவிக்கவேண்டும். எல்லாவிபரங்களும் யாழ்ப்பாண ஏஜண்டரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணக் கச்சேரியில் முன்தொகையாக ரூபா 25 கட்டி அதன்மூலம் பற்றுச்சீட்டைக்கொடுத்து குறித்த பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இப்பத்திரங்கள்(Forms) 1949-ம்ஆண்டு நவம்பர்மாதம் 26-ம் திகதி சனிக்கிழமை மத்தியானம் 12 மணி வரைக்கும் யாழ்ப்பாணக் கச்சேரியில் பெற்றுக்கொள்ளலாம்.

கச்சேரி, பி. ஜே. கட்சன்
யாழ்ப்பாணம். வடமாகாணஏஜண்டர்
15-11-49.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம்

சென் வின்சென்ற் டி போல் தருமசபை யாழ்ப்பாணம்



### நன்றியறிந்த ஸ்தோத்திரங்களும் மன்றாட்டங்களும்

சுண்டிக்குளி :—யாழ்ப்பாணம் வண். கிழக்கிலும், கந்தர்மடத்தடியிலும் கோப்பாயிலும், கலட்டியிலும், காரைநகரிலும், வேலணையிலும் எனது பிதா மயில்வாகனம் அருளம்பலத்துக்குரிய காணிகள் (12), நாள்பிறந்து ஆறுமாசத்தால் எனது பிதா இறந்துபோக என்னை அறியாது மூடிமறைக்கப்பட்டிருந்தன. சர்வவல்லபரான கடவுளின் கிருபையினால், அர்ச். இரபியேல் தேவதூதருடையவும் கோடியற்புதராகிய அர்ச். அந்தோனியாருடையவும், உதவிசகாயத்தால் அவை இவ்வருஷம் கைமாசம கண்டுபிடிக்கலாக அவற்றுள்ஒருகாணிக்கு மாத்திரம்வழக்கு தொடர்ந்து எனக்கு வெற்றிகரமாய் முடிந்ததால் நன்றியறிதலாக ஏழைகளின் தருமத்துக்கு இப்போது ஓர் சிறு தொகை ரூபா 5 காணிக்கை கொடுக்கிறேன்.

அருளம்பலம் மிக்கேற்பிள்ளை

யாழ்ப்பாணம் :—காணமற்போன ஒரு பொருளைக்காட்டித்தந்ததற்காக அர்ச். அந்தோனியாருக்கு நன்றியாக அவரின் ஏழைகளுக்கு 1 ரூபா காணிக்கைகொடுக்கிறேன்.

T. அருமைநாயகம்

நாக்கியம்புலம் :—எத்தனையோ வைத்தியரால் மாறுதெனக்கைவிடப்பட்ட எனதுநோய் திருஇருதய ஆண்டவரின் இரக்கத்தாலும் பரிசுத்தபத்திமாமாதாவின் உதவியாலும் கோடியற்புதரின் மன்றாட்டத்தாலும் பாதிக்குமேல் சுகங்கிடைத்திருக்கிறது. பூரணசுகம்கிடைக்கும்படிவேண்டி, இத்துடன் அர்ச். அந்தோனியாரின் ஏழைகளுக்கு நேர்த்திப்படி ரூபா 10 அனுப்புகிறேன்.

I. V.

### கேட்டநன்மைகள் அனுகூலமானதினால் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்

அம்பிற்றியா : எம். டானியேல் 3-00—உடப்புசலாவை: எஸ். எம். யோசேப்பு 25-00—கொழும்பு: எஸ். ஜோண் 2-00—கல்கமுவா: வ. சந்தியாப்பிள்ளை 1-00—மாத்தளை: ரி. எவ். சைமன் 2-00—கல்கமுவா: சீ. மரியாம்பிள்ளை 2-00—மன்னார்: எவ். ஜி. ரி. 2-00—அக்கரப்பத்தன: ஏ. பி. நடராஸ் 1-00—சிங்கப்பூர்: எம். மரியாம்பிள்ளை 3-00—கொலன்டா: கு. பெருமாள் 1-00—பண்டாரவளை: வி. கே. தியாகராசா 1-00—கொற்றமல்லி: எவ். பி. சாமுவேல் 1-00—நனுஓயா: எஸ். எச். பஸ்ரியான் 2-00—கல்கமுவா: ம. பிரான்சீஸ் 1-00, க. மடுத்தீனள் 1-00—மாம்புரி: ஏ. மரியாம்பிள்ளை 1-00—நிவெடா: வை. ஐ. கோமஸ் 1-00—சுண்டிக்குளி: பி. ஆர். எஸ். 1-00—டிக்கோயா: டபிள்யு. எக்ஸ். எற்வேட் 1-00—வறக்கபொல்லா: பி. லீயோ வயின்ரியேனிஸ் 2-00—கல்கமுவா: ந. சுவக்கீம் 1-00—வெல்யிபின்ன: பி. எஸ். கயித்தான் 5-00—யாழ்ப்பாணம்: எம். வி. ஆசீர்வாதம் 1-00—பண்டாரவளை: சூசைமரிபீற்றர் 7-00—புத்தளம்: பிறுங் எல். லீயோ 5-00—யாழ்ப்பாணம்: ஓர் உபகாரி 1-00—கல்லில்லா: ஏ. எல். சீமான் 2-00—உடப்புசலாவை: எஸ். வி. மரியரேஸ்பீற்றர் 2-00—லுணுகலை: பி. யுவக்கீம் 15-00—பசறை: பி. ஏ. டீசன் 2-00, பிலிப் அன்ரனி 1-00—தலவாக்கொல்லை: பி. ஆர். மாட்டீன் 1-00, விக்றர் ஜே. சகாயம் 2-00—கொழும்பு கே. அல்வீனுஸ் பெரேரு 2-00—வட்டகொடை: எல். ரி. எஸ். பஸ்ரியன் 2-00—அக்கரப்பற்றன: எல். ஏ. எஸ். தோமஸ் 1-00—கரவெட்டி: பி. கபிரிகேற்பிள்ளை 1-00—பண்டாரவளை: எஸ். பி. மாசில்லாமணி அப்பு 5-00—உடப்புசலாவை: எஸ். வி. பீற்றர் 1-00—யாழ்ப்பாணம்: யோ. மனுவேற்பிள்ளை 15-00—மடுசேனா: ஜே. எஸ். மாட்டீன் 2-00, மிசெஸ். கதிரவேல் 1-00—முருங்கன்: எல். அருளம்மா 5-00—மலாயா: எஸ். யோசேப் 6-60—அம்பிற்றியா: மிசெஸ். பி. ஏ. மாட்டீன் 1-00—சிலாபம்: மிசெஸ். வினிவிறேற் பெர்ணண்டோ 1-00—கல்கமுவா: ஏ. பஸ்ரியன் 1-00, சீ. சூசைப்பிள்ளை 1-00—சூராவத்தை: இ. ரேசம்மா 2-00—அச்சுவேலி: பி. எஸ். 2-00—புத்தளம்: பி. ஏ. மரியாம்பிள்ளை 3-00—அப்புத்தளை: எலிசபேத் 1-00—கொக்கிளாய் ஏ. அன்னம்மா 2-00—எழாலை: ஏ. அன்னபாக்கியம் 1-00.

Ml. No. 445. Engeals.

## மஞ்சள்கொடி பறக்கவிடப்பட்டது

கம்பியில்லாத ஆகாயசலன தந்தியைக்கண்டுபிடித்தவரான மாக்குயிஸ்குக்வியெல்மோ மார்க்கோனிபிரபுவுக்கு நாம்ஒருபேர்துமே போதியநன்றியறிதலுள்ளவர்களாய் இருக்கமுடியாது. எல்லாத்துக்கும்மேலாக நவமாய்க் கண்டுபிடிக்கப்பட்ட இக்கருவிகொண்டு கப்பல்களில்தான் மகாப் பெரியநன்மை அடைந்துகொள்ளப்படுகிறது. அநேகமாலுமிகள் இந்தஆகாயசலன தந்தியால் தங்கள்சீவனையே காப்பாற்றிக்கொண்டார்கள். என்றாலும் இது பாவனைக்குவருமுன் கப்பலுக்குக் கப்பல் செய்திகள் அனுப்பிவைப்பதற்கு அறவே ஒருவழிவகையும் இருக்கவில்லையென்று நினைக்கப்படாது. (சர்வதேச விளக்கம் ஒன்றைக்கொண்ட கொடிகளும், மற்றும்சாதனங்களுமாய்) கண்பார்வைக்குரிய அடையாளங்களின் பாவனையானது, நியாயமான நீண்ட தூரத்திலிருக்கும்கப்பல்கள் ஒன்றுக்கொன்று செய்தியனுப்பக்கூடியதாகச்செய்தது. மேலும் கண் பார்வைக்குரிய இந்த அடையாளங்கள் கடலடுத்த உலகத்தில் இன்னுமே பயன்படுகின்றன. அவற்றிலே சிலவற்றின்கருத்தை மாலுமிகள்அல்லாதவர்கள்தானும் விளங்கிக்கொள்ளுகிறபடியால் போதியளவு பிரஸ்தாபம் அடைந்திருக்கின்றன. உதாரணமாக, துறைமுகம்ஒன்றில் பிரவேசிக்கின்ற ஓர்கப்பலின் பாய்மரத்தில் ஏற்றப்பட்டுள்ள ஓர்மஞ்சள்கொடியின்கருத்தை அறியாதோராய்வெகுசிலரே இருக்கின்றார்கள். "கப்பலிலே தொற்றுநோய் கண்டவர்கள் இருக்கிறார்கள். அதனால் டக்றரைத்தவிர வேறொருவரும் கப்பலுக்கு வரவேண்டாம்."

முற்காலத்திலே மஞ்சள்கொடிபறப்பது சாதாரணசம்பவமாய் இருந்தது. ஆனால், சுகாதாரத்தைப்பற்றி விஞ்ஞானம் எங்களுக்குஅதிகம் படிப்பித்திருக்கிற இக்காலத்திலே அத்தகைய அறிகுறிகள் அருமையாகிவிட்டன.

ஆயினும்பலவருடங்களுக்குமுன்னே கேப்ரவுண்நகரமக்கள் கிளென்மைக்குலாறியேஎனும் பிரித்தானியசாமான் கப்பல் தனதுபாய்மரத்திலே மஞ்சள் கொடியைப் பறக்கவிட்டுக்கொண்டு ரேபிள்குடாவில் பிரவேசித்தபோது, கருமத்தை விளங்காது பயந்துபோனார்கள். மாலுமிகளில்ஒருவர் கடுமையான குணங்குறிகளைக்கொண்ட அறியப்படாதஓர் நோய்கண்டு ஏற்கனவே இறந்துபோயினர். அதனால் வைத்திய சகாயம் அவசியம்வேண்டியிருந்தது. கடுமையான குவாறன்ரைன் நடவடிக்கைகள் உடனேதானே அநுசாரணைக்குக் கொண்டுவரப்பட்டன. கரையில் இறங்கவோ அல்லது கப்பலில்ஏறவோ எவருமே அனுமதிக்கப்படவில்லை. 'ரைபோயிட்'எனப்படும் நெருப்புக்காய்ச்சல் உண்டாகிவிட்டதென்றே முதலில் கருதப்பட்டது. ஆனால், கடைசியாக அந்நோய் மலேரியாவென்று நிரூபிக்கப்பட்டது. பின்னர் வேண்டிய பரிசோதனை நடத்தியதன்மேல் கப்பல் தங்குமிடத்தில்போய்த் தங்க அனுமதிக்கப்பட்டது. மாலுமிகளும் கரையில் இறங்கவிடப்பட்டார்கள். கரியேற்றியபின் கப்பல் நோய்கண்ட மனிதனுடன் கடலில் செல்லவிடப்பட்டது. ஏனெனில், மலேரியாவைத் தடுப்பதற்குப் பயன்தரும்மருந்தொன்றுஇருந்தது. அதுதான் குயினைன். மலேரியா காணும்போது அது கண்டவர்களுக்குத் தினமும் 15 முதல் 20 கிறேய்ன் குயினைன் கொடுக்கப்பட்டது. மலேரியாவராமல் தடுப்பதற்கு மாலுமிகளில்ஒவ்வொருவருக்கும் மலேரியாக்காலமுழுவதிலும் தினமும் 5 கிறேய்ன் குயினைன் கொடுக்கப்பட்டது. தற்போது இல்லாதொழிந்த சர்வதேசசங்கத்தின் மலேரியாநிபுணர்களின் கொம்மிற்றியானது இம்முறையை விதித்திருக்கிறது.

## துணை மேற்றிராணியாரின் முதல் தரிசனை

மானிப்பாய், 10—11—49.

யாழ்ப்பாண முதற்தமிழ் மேற்றிராணியாராகிய மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவரவர்களை வரவேற்பதற்காக மானிப்பாய், அர்ச். அன்னம்மாள்ஆலய மைதானமானது சுவர்க்கலோகம் போல் காட்சியளித்தது. அன்றுபிற்பகல் 3 மணியளவில் ஆண்டவர்அவர்கள் வண. ஐயாத்துரை சுவாமியவர்கள் சமேதராய், ஆனைக்கோட்டைக் கூழாவடிச் சந்தியை அடைந்ததும் கிறீஸ்தவர்களும், பிறமதத்தவர்களும்சமுகமாக வண V. R. தார்சீசியஸ் சுவாமியவர்கள் ஆண்டவர்அவர்களை ஆசரித்து வரவேற்கவே, நாதசுர வாத்திய வரிசையுடன் ஊர்வலமாய் அழைத்துச்சென்று அலங்கரிக்கப்பட்டிருந்த பாடசாலை உயராசனத்தில் அமரச்செய்தனர். திரு. அ. மனுவல்பிள்ளை அவர்களாலும், மாணவர்களாலும் மலர்மாலைகள் சூட்டப்பட்டன. பாலிகைகளால் பாமாலைகள் சாற்றப்பட்டன. திரு. குரூஸ் அவர்களால் வரவேற்பிதழ் படித்துக்கொடுக்கப்பட்டது. திரு. பி. விசேந்தி அவர்கள் தெட்சணை சமர்ப்பித்தார். பின்னர் பாடசாலை மாணவர்களால் வரவேற்பிதழ் வாசித்தும் கொடுக்கப்பட்டதுடன் பூசைப்புத்தகக் ஒன்று தெட்சணையாகச் சமர்ப்பிக்கப்பட்டது. ஆண்டவர் அவர்கள் எழுந்து தாம் பிரதம மூகாமைக்காரராய் இருந்தகாலத்தில் பிறமதச் சுற்றாடலிலிருந்து அழிந்துபோகும் நிலைமையில் இருந்த பாடசாலையை ஆலயவளவிற்குள் கொண்டுவந்து அமைத்ததையும், இங்கே திருக்குடும்பக் கன்னியர் மடத்தை ஸ்தாபித்து இப்பாடசாலையை அவர்கள்வசம் ஒப்படைத்ததையும் எடுத்துக்காட்டி இவை இரண்டும் மானிப்பாய் மக்களுக்குப் பெரிய பாக்கியம் என்றும், எல்லாரும் ஒற்றுமையாக ஒத்துழைக்க வேண்டுமென்றும் அரிய பல நன்மொழிகள் கூறித் தமக்களித்த வரவேற்பிற்காகக் கிறீஸ்தவர்களுக்கும், பாடசாலைப் பிள்ளைகளுக்கும் நன்றிகூறித் திருக்கா ஆசீர்ந்தார்.

ஈற்றில் பாடசாலை மாணவர்களால் கீதம், நடனம், நாடகம் ஆதியன ஆங்கிலத்திலும், தமிழிலும் நடைபெற்றதுடன் வரவேற்பு வைபவம் இனிது நிறைவெய்தியது.

— மானிப்பாய், மாணவி

❀ ஹங்கேரியிலே சிறைவைக்கப்பட்டிருக்கும் கருதினல் மின்ட்சென்ரி ஆண்டவரில் விதிக்கப்பட்ட தேசதுரோக குற்றவிசாரணை ஓர் சினிமாப்படமாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதிலே "பொன்னேதத்தின் கீதம்" என்ற சினிமாவில் குருவாக நடித்துப் பிரக்யாதிபெற்ற சாள்ஸ்பிக்போட் அவர்கள் கருதினலிடமாக நடித்திருக்கின்றார்.

## சஞ்சூசையப்பர் தாசர்களுக்கு ஓர் விண்ணப்பம்

இதைக் கண்ணுறும் அரிய சகோதரமே! 1873-ம் ஆண்டு சம். பிலிப்புநேரியார் சபையைச் சேர்ந்த கோவைக்குரவராம் அறுக்காஞ்சிநாதர் என்பவரின் என்புகள்கொண்டு வந்து அடக்கப் பெற்றதும், இற்றைக்கு 50 ஆண்டுகளுக்குமுன் பட்டமரம் துளிர்க்கப் பெற்றுப் புதுமையுடன் விளங்கியதுமான ஆளவெட்டி சஞ்சூசையப்பர் கோயில் அழிந்தொழியும் பக்குவநிலையில் இருப்பதைக்கண்ட பலரும், பங்குக்கிறீஸ்தவர்களும், கோயில் அதிகாரிகளும் அதைப் புதுப்பிக்கும் நோக்கம்கொண்டு திருப்பணியைத் தொடங்கிவிட்டார்கள். மேற்படி கோவிற்கிறீஸ்துவ குடும்பங்களின் தொகையோ விரல்விட்டெண்ணலாம்.

வெறுங்கை முழமிடுமா?

ஆகையால் திருக்குடும்பப் பாதுகாவலராம் அர்ச். சூசையப்பரின் ஆலயத்தைக் கெதியில் கட்டி முற்றுப் பெறுவிக்கத் தங்களால்இயன்ற பொருளுதவியை எமக்கு அனுப்பிவைத்து (இளவாலைக் கட்டளைக் குருவானவருக்கு) அர்ச்சியசிஷ்டரின் ஆதரவையும் அன்பையும் பெறத் தவறுதீர்கள். எவ்வித சிறிய தொகையும் நன்றியுடன் ஏற்றுக் கொள்ளப்படும்.

"பல துள்ளி பெரு வெள்ளம்"

J. F. Xavier, O. M. I
கட்டளைக்குரு
இளவாலை.

## இரகசியங்கள் ஒன்பதும் எவையாய் இருக்கும்?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவளுக்கு இது அறிவிக்கப்படலாயிற்று.

ஜிமிக்ளியானோ எனும் கிராமத்தைஅடக்கிய அஸ்கோலி மேற்றிராசனத்தின் மேற்றிராணியாரான மகாவந். அம்புரோசியோ ஸ்குயின்ரின் ஆண்டவர் "ஸ்கபபியூலர்"எனும் பத்திரிகை நிருபருக்குப் பேட்டியளித்துப் பேசியவிடத்து: "பரிசுத்ததேவதாயார் மற்றுமோர்தரம் காட்சியளித்திருப்பதாகச் சமீபத்தில் வெளியாயிருக்கும் வரலாறுபற்றித் திருச்சபை ஒரு பக்கமோ அன்றேல் மறுபக்கமோ சாய்ந்து நிற்கப்போவதில்லை. உண்மைகளை வெளியிடுவது முற்றிலும் சரிதான். ஆனால், அதற்கப்பால் நாம் செல்லப்படாது"எனக் கூறியிருக்கின்றார்.

❀ நியூயோக்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் ஸ்பெல்மன் ஆண்டவர் சமீபத்திலே பாப்பரசரின் பேட்டிபெற்றுத் திரும்பியதும், பரிசுத்த பிதா நல்லசுகதோற்றமுடையராய்க் காணப்படுவதாகவும், உள்ளபடியே தாம் எதிர்பார்த்ததிலும் அவர் அதிக சுகமுடையவராய் இருப்பதாகவும் தெரிவித்திருக்கின்றார்.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39 Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, November 24 1949.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org